# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் 8 SEPTEMBER இதழ் 9




வெளியிடுவோர்

காங்கயம் கிறிஸ்துவின் சபையார்
தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701

நீங்கள் ஈரோட்டில் இருக்க நேர்ந்தால் கீழ்க்கண்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு கர்த்தருடைய பிள்ளைகளோடு சேர்ந்து ஆராதியுங்கள்.

இடம் :- 2, மணல்மேடு வீதி, ஈரோடு - 638 002.
(ரயில் குட்செட் சமீபம்)

## நாளும் நடப்பும்

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு | காலை | 9.30 - 11.00 | காலை ஆராதனை |
| ஞாயிறு | பகல் | 11.00 - 12.00 | ஞாயிறு பள்ளி |
| ஞாயிறு | மாலை | 5.30 - 6.30 | திருமறை ஆய்வு & கலந்துரையாடல் |
| வியாழன் | மாலை | 7.15 - 8.30 | வேத ஆய்வுவகுப்புகள் |
| வெள்ளி | மாலை | 7.00 - 9.00 | ஜெப ஆராதனை |

## ஆசானின் அறிவுரையிலே


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | பர்கிமேயு | 1 |
| 2. | பரிசுத்த ஆவியின் வரங்கள் அற்புதங்களா? | 9 |
| 3. | (பெண்கள் பகுதி) - நட்பு | 13 |
| 4. | திருமுழுக்கின் அழகும், அவசியமும் | 16 |
| 5. | இயேசு கிறிஸ்து தேவனின் குமாரன் | 19 |
| 6. | நமது செயல்களை மூடி மறைக்கவும் நியாயப்படுத்தவும் நாம் கூறும் போலி சமாதானங்கள் | 21 |
| 7. | புதிய ஏற்பாட்டு ஆராதனை - 1 ஆராதனை அர்த்தம் | 24 |
| 8. | யெகோவா சாட்சிகள் - (8) பரிசுத்த ஆவியின் நபர்தத்துவத்தை மறுதலிக்கும் கூட்டத்தார் | 28 |
| 9. | அவர்கள் உங்கள் கதவைத் தட்டும் போது.... | 30 |

THIRUMARAI AASAAN

Editor
E.Z.S. RAJANAYAGAM

Honorary Editor
J.C. CHOATE

Published by Church of Christ
Dharapuram Road, KANGAYAM-638 701 Tamilnadu, India.
Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 8 SEPTMBER Issue-9

## ஆசிரியவுரை

# "பர்திமேயு"

அநேகரால் அறிந்து கொள்ளப்பட வேண்டியவர்களாயிருந்தும், அறியப்படாமல் ஒதுக்கப்பட்டுள்ள சாமானியர்களைக் கண்டறிந்து, அவர்களிடம் அடங்கியுள்ள அருங்குணங்களை அம்பலப்படுத்துவதில் அடியேனுக்குத் தணியாத தாகம் உண்டு. கடந்த ஓராண்டிற்கு முன், பழைய ஏற்பாட்டின் காலத்தில், வீரத்தின் விளைநிலமாக விளங்கிய "சம்மா"வை (II சாமு. 23 : 11,12) அறிமுகம் செய்தேன். இப்பொழுது புதிய ஏற்பாட்டில் கண்டெடுக்கப்பட்ட நன்முத்தாகிய "பர்திமேயு" என்ற குருடனை நமக்கு வழிகாட்ட அழைக்கிறேன்.

"எரிகோ" என்பது பழைய, மற்றும் புதிய ஏற்பாட்டுக் காலத்தில் இருந்த முக்கிய பட்டணம். இயேசுவின் நாட்களில் பெலஸ்தீனாவில் இது இரண்டாவது பெரிய நகரம். யோர்தான் நதியின் மேற்குக்கரைப் பகுதியில் அமைந்த இப்பட்டணம், எருசலேமிலிருந்து 17மைல் தொலைவில் இருந்தது. சரித்திர காலத்தில் இப்பட்டணம் பலமுறை அழிக்கப்பட்டு மீண்டும், மீண்டும் கட்டப்பட்டுள்ளது. ஆனால், கடைசியாக அழிக்கப்பட்டதற்குப் பிறகு, மீண்டும் கட்டப்படாமல் சில நூற்றாண்டுகளாக மண்மேடுகளாக இன்றும் காட்சியளித்துக் கொண்டுள்ளது.

அந்நாட்களில் உழைத்துப் பிழைக்க வழியில்லாதவர்கள் வழக்கமாக 'பிச்சை' கேட்கும் வேலையைச் செய்வார்கள். இவனும் ஒரு குருடனாக

இருந்தபடியால், பிச்சைத் தொழிலை மேற்கொண்டான். பொதுவாக பிச்சை எடுப்பவர்கள் ஆலயத்தின் வாயிலையும், பட்டணத்தின் வாசலையும் தெரிந்தெடுப்பர். ஏனெனில் மக்களின் போக்குவரத்து இவ்விடங்களில் அதிகமாயிருக்கும். பிச்சைத் தொழிலுக்கு, வெகுஜன நடமாட்டம் ஒரு சாதகமான அம்சம். இங்கே, நமது பர்திமேயு பட்டண வாசலைத் தெரிந்தெடுத்திருந்தான். இவன் தெரிந்தெடுத்த இடம் இவனை ஒரு புத்திசாலியாகவே நமக்குக் காட்டுகிறது.

இவனைப்பற்றி - இவன் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சியைப் பற்றி மத்தேயு, மாற்கு, லூக்கா ஆகிய மூன்று ஆசிரியர்களும் எழுதியிருந் தாலும், மாற்கு மட்டும் இவன் பெயரைக் குறிப்பிட்டு எழுதியுள்ளார். ஆகவே, நம்முடைய பாடத்திற்கு மாற்கு. 10 :46-52 வசனப் பகுதியை எடுத்துக் கொள்வோம்.

தன்னுடைய ஊழியநாட்களில் பெலஸ்தீனா தேசம் முழுமையும் சுற்றிவந்த இயேசு, ஒரு சமயம் எரிகோ பட்டணத்திற்கு வந்தார். அங்கே தன் பணியை நிறைவேற்றிப் பட்டணத்தை விட்டு வெளியேற முற்படும் பொழுது தான் நமது "வழிகாட்டியாகிய" குருடன் பர்திமே யுவைச் சந்திக்கிறார். ஆம், நசரேயனாகிய இயேசுக்கிறிஸ்து, தான் உட் கார்ந்திருந்த வாசல்வழியாக வருகிறாரென்று கேள்விப்பட்டு, இயேசுவோடு வருகிற பெருங்கூட்டத்தின் பேரிரைச்சலையும் மிஞ்சின சத்தத்தோடு, "தாவீதின் குமாரனே எனக்கு இரங்கும்" என்று கூப்பிடத் தொடங்கினான்.

ஆனால், எளியவர்களை ஏளனமாகப் பார்த்து, அவர்களின் வாயை நாகூசாமல் அடக்க நம்மில் அநேகர் முற்படுவதைப் போலவே, அங்கும் பலர் முயன்றனர். அதிகார தோரணையோடு அவனை அதட்டினர். ஆனால், ஒரு முடிவோடு கத்தின இவன் சத்தத்திற்கு முன், அவர்களின் மிரட்டல் மண்டியிட்டது. இப்பொழுது இயேசுவும் அவனுடைய சத்தத்தைக் கேட்டார்.

ஏழைகளுக்கு மனம் இரங்கி அவர்கள் வாழ்வில் பெரும் மாற்றங்கள் பல செய்த இயேசு. இங்கே பர்திமேயுவை அழைத்தார். இயேசுவின் அழைப்பை, "அவனை அதட்டின அநேகர்", அவனிடம் கொண்டு சென்றனர். (வ.47) உடனே அவன் தன் மேல் வஸ்திரத்தை எறிந்து விட்டு, இயேசுவிடம் வந்தான். அவனுடைய தேவை என்ன என்பதை இயேசுவானவர் ஏற்கனவே அறிந்திருந்தாலும், என்ன வேண்டு மென்று அவனிடம் ஒரு கேள்விகேட்டு விட்டு, "நீ போகலாம், உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது" என்று சொல்லி அவனை அனுப்

பினார். உடனே, அவன் பார்வையடைந்து, வழியிலே இயேசுவுக்குப் பின் சென்றான். இதுதான் இவனைப் பற்றி மாற்கு ஆசிரியரால் சொல்லப்படும் சம்பவம்.

இந்தச் சாமானியனிடமிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்களை இப்போது பார்ப்போம்.

## I. தாவீதின் குமாரனே என்று சத்தமிட்டான். (வச.47)

இயேசுக்கிறிஸ்து நாசரேத்தில் வளர்ந்தபடியால், அந்நாட்களில் அவர்"நசரேயனாகிய இயேசு" என்று தான் மிகப் பெரும்பாலோருக்கு அறிமுகமாயிருந்தார். ஆனால், இந்தப் பர்திமேயு இன்னும் மேலான, கருத்தாழமிக்க அர்த்தத்தோடு "தாவீதின் குமாரனே" என்று கத்தினான். அதாவது, "தாவீதின் சிங்காசனத்திற்குச் சொந்தமாக வருவார் என்று தீர்க்கதரிசனங்களால் முன்னுரைக்கப்பட்ட மேசியா" இவர் தான் என்று முழுமையாக நம்பி சத்தமிட்டான்.

வேதவாக்கியங்களைப் பார்த்து வாசிக்கமுடியாத பரிதாப நிலையிலிருந்த பர்திமேயு, இயேசு யார் என்றும், அவர் யாருடைய வம்சத்தில் வந்தவர் என்றும், அவருடைய வல்லமை என்ன என்றும் அறிந்து வைத்திருந்தான். அவனுடைய நாட்களில் பெரிய மனிதர்களென்றும், உண்மையான மதவாதிகளென்றும், அசல் பக்திமான்களென்றும் சமுதாயத்தால் அங்கீகரிக்கப்பட்ட அநேகர், இயேசு யார் என்று புரிந்து கொள்ள முடியாமல் குழம்பி, தட்டுத்தடுமாறி கேள்விமேல் கேள்வி எழுப்பிக் கொண்டிருக்கும் போது, இந்தச் சாமானியனான பர்திமேயு சத்தமாக மாத்திரமல்ல, சுத்தமாகவும் சொல்கிறான், இவர் "தாவீதின் குமாரன்" என்று. ஆம், இப்படிச் சொன்னதால் இவர்தான் மேசியா என்று அநேகர் காதுகளில் ஒலிக்க அம்பலப்படுத்தினான்.

நம்முடைய நிலை என்ன? நாம் இயேசுவைப் பற்றியும், அவருடைய தெய்வீகத்தைப் பற்றியும், அவருடைய வல்லமை பற்றியும் எந்த அளவுக்கு அறிந்து வைத்துள்ளோம். பர்திமேயுவின் நாட்களில் பக்திமான்களென்று சமுதாயத்தால் அடையாளம் காட்டப்பட்டவர்கள் குழம்பிப் போயிருந்ததைக் காட்டிலும், மிக மோசமாக நம்முடைய சமுதாயத்து மதத் தலைவர்கள் குழம்பிப் போயிருப்பது உண்மை தான். குறிப்பாக, இந்த "அற்புத வியாபாரிகள்", இயேசுவை வைத்தியராகவும், நலிவுற்றோர் பிரிவு தலைவராகவும், மந்திரவாதியாகவும் கடன் மற்றும் குடும்பப் பிரச்னைகளைத் தீர்ப்பவராகவும் இன்னும் வசனத்திற்கு ஒவ்வாத அநேக வகைகளில் அறிமுகப்படுத்தி வருவது உண்மையிலும் உண்மை.

இப்படிப்பட்டவர்களோடு போட்டியிட முடியாதென்பதற்காக முடங்கிப்போய் மூலையில் உட்கார்ந்து கொள்வதா? அல்லது அவர்களோடு சேர்ந்து நாமும் கூட்டத்தோடு"கோவிந்தா" என்பதா? அல்லது எப்பாடு பட்டாவது அவர்களை "கிறிஸ்துவின் விரோதிகள்" சமுதாயத்திற்கு அடையாளம் காட்டுவதா? எது சிறந்தது?

முதலாவது, நாம் இயேசுக்கிறிஸ்து யார் என்பதையும், அவர் எதற்காகப் பூமிக்கு வந்தார் என்பதையும், பூமியில் அவர் என்ன செய்தார் என்பதையும், எதை நிறைவேற்றினார் என்பதையும், என்ன வாக்குக் கொடுத்தார் என்பதையும், எதற்காக மேலே போனார் என்பதையும், எதற்காகத் திரும்பி வருகிறார் என்பதையும் திட்டமும், தெளிவுமாக அறிந்து, பிறகு அநேகர் காதுகளில் ஒலிக்கும்படியாக சத்தமாகச் சொல்லவேண்டும்.

உண்மையை விளங்கிக் கொள்ளாத, சத்தியத்தைப் பிடிவாதமாக ஏற்றுக்கொள்ள மறுக்கும் மாய்மால சந்ததியில் நாம் வாழ்ந்து கொண்டுள்ளோம். சத்தியம் இன்னதென்று அவர்களுக்குத் தெரியாது. ஆனால் நாம் சொல்வதையும் ஏற்றுக்கொள்ளார்கள். பரவாயில்லை. பர்திமேயுவைப் போல உண்மையைச்சத்தமாகச் சொல்லி இந்தக் குருடன் காட்டும் வழியில் நடப்போம்.

## II. தடைகளைத் தகர்த்தெறிந்தான். (வச.48)

இயேசுக்கிறிஸ்து யாரென்றும், அவருடைய வல்லமை இன்னதென்றும் அறிந்து அவரண்டை போக விரும்பினபோது பர்திமேயுவுக்கு வந்த தடைகள் அதிகம். அவன் சத்தமில்லாமல் இருக்க வேண்டுமென அதட்டினவர்கள் "அநேகர்" என்று வசனம் சொல்கிறது. பார்வையில்லாதது, பாவத்தின் விளைவு என்று நினைத்த காலம் அது. ஆக, இந்தப் பின்னணியில் இயேசுவோடு வந்த சுய நீதிக்காரர்கள் அவனை எப்படியெல்லாம் ஏசி அதட்டியிருப்பார்களென்று எண்ணிப்பாருங்கள்.

ஆனால், எப்படியும் தனது சத்தம் தாவீதின் குமாரனின் காதுகளில் தொனித்தே ஆகவேண்டுமென்று உறுதிபூண்டிருந்த பர்திமேயு தடைகளைப்பற்றிக் கவலைப்படவேயில்லை. சொல்லப்போனால் "ஆனது ஆகட்டும்" என்று முன்னிலும் அதிகமாய்க் கூப்பிட்டான். அவனுடைய நம்பிக்கைக்கும் துணிவுக்கும் கைமேல் பலன் கிடைத்தது. ஆம், இயேசு அவன் சத்தத்தைக் கேட்டார்.

நாமும்கூட இயேசுவண்டை வரவிரும்பும்போது எதிர்ப்புகளுக்குப் பஞ்சமே இராது. அதுவும் நாம் சமுதாய அந்தஸ்தில் தாழ்ந்தவர்களா கவும், பொருளாதாரத்தில் பிறரை எதிர்பார்ப்பவர்களாகவுமிருந்தால் சொல்லவே வேண்டாம். இயேசுவோடு வந்த பொய்ப் பக்திக்காரர்கள், பர்திமேயுவின் வாயை அதிகாரத்தோடு அடக்க முற்பட்டதைப் போல, உண்மைச் சத்தியத்தை சத்தமாகச் சொல்லும் நமது வாய்க்குப் பூட்டுப்போட முயற்சிப்பார்கள். நாம் சொல்லும் சத்தியத்திற்குச் செவிகொடாமல் நம்முடைய தகுதியைத் தராசில் நிறுத்துவார்கள்.

ஆனால், நாம் எதைப்பற்றியும் கவலைப்பட வேண்டிய அவசியமே இல்லை. பர்திமேயுவை, திரளான ஜனக்கூட்டிற்கு மத்தியிலும் கண்ட இயேசு, நம்மையும் காண்பார். நாம் சொல்வது நமக்கருகில் உள்ளவர்களுக்குப் பிடிக்கிறதா இல்லையா என்பது முக்கியமே அல்ல. நாம் சொல்வதில் இயேசு பிரியப்படுவாரா என்பதே கேள்வி. இங்கே, தேவனுடைய வார்த்தைக்கு விரோதமான எதிலும் இயேசுக்கிறிஸ்து பிரியப்படமாட்டார் என்பதை கவனிக்க வேண்டும் (மத். 7 : 24).

வேறொன்றையும் இங்கே குறிப்பிட்டாக வேண்டும். இவனுடைய சத்தத்தைக் கேட்ட இயேசு, அவனைத் தன்னிடம் வரும்படி அழைத்தார். அந்த அழைப்பை அவனிடம் அநேகர் சொல்லியுள்ளனர் (வ.49). அந்த அழைப்பை எடுத்துச் சென்றவர்களில் இவனை அதட்டினவர்களும் அடக்கம். எப்படிப்பட்டதான மாற்றம் பாருங்கள். தடைகளைப் பற்றியும், எதிர்ப்பைப் பற்றியும் கவலைப்படாமல், நீதிக்காகவும், சத்தியத்திற்காகவும் பாடுபடும்பொழுது, பக்தியில், ஊழியத்தில் இயேசு நம் பிரியப்படும்பொழுது எல்லாம் தலைகீழாக மாறும். ஞானி சாலமோனும் தன்னுடைய எழுத்துக்களில் இக்கருத்தை வெளிப்படுத்தியுள்ளார். "ஒருவனுடைய வழிகள் கர்த்தருக்குப் பிரியமாயிருந்தால், அவனுடைய சத்துருக்களும் அவனோடே சமாதானமாகும்படி செய்வார்" (நீதி. 16 : 7).

ஆக, நம்முடைய கிறிஸ்தவ ஜீவியத்தில் எதிர்படும் தடைகளைத் தகர்த்தெறிவதில், இந்தக் குருடனை வழிகாட்டியாகக் கொள்வோம்.

## III. தன் மேல் வஸ்திரத்தை எறிந்துவிட்டு, எழுந்து இயேசுவிடம் வந்தான் (வச. 50)

தண்ணீருக்காக அழுத ஆகாரின் சத்தத்தையும், பிள்ளைக்காக அழுத அன்னாளின் சத்தத்தையும், பிதாவாகிய தேவன் கேட்டதுபோல, பார்வைக்காகக் கத்தின பர்திமேயுவின் சத்தத்தை இயேசு கேட்டார்.

ஆம் அந்நாட்களில் அற்புதங்கள் பல இயேசு செய்திருந்ததால், நிறைந்த கூட்டம் நெருக்கி வந்திருக்கும். அப்பெருங்கூட்டத்தின் பேரிரைச்சலுக்கு மத்தியிலும், தன்னை நோக்கி வந்த அவலக் குரலை, இயேசு சரியாகக் கேட்டார்.

அவனுடைய சத்தத்தைக் கேட்டு மனதுருகின இயேசு, அவனைத் தன்னிடம் வரும்படி அழைத்தார். அழைப்பைப் பெற்றவுடன், இயேசு வண்டை வெகுசீக்கிரம் வந்து சேர்வதற்குத் தடையாக இருந்த மேல் வஸ்திரத்தைத் தூக்கி எறிந்துவிட்டு விரைந்து வருகிறான். இயேசு வண்டை தான் வந்து சேர தன்னிடம் இருக்கின்ற எதுவும் தடையாக இருக்கக் கூடாது என்று எண்ணி எறிந்துவிட்டு வருகிறான்.

சாதாரணமாக, இவனுடைய நிலையிலிருப்பவர்கள், தன் கஷ்டம் சம்பந்தப்பட்டவருக்குத் தெரிய வேண்டுமென்பதற்காக எழுந்து, விழுந்து, தொட்டுத் தடவி பரிதாபமாக வந்து நிற்பர். ஏனெனில், அப்பொழுது தான் மற்றவர்களுடைய இரக்கத்தைச் சம்பாதிக்க முடியும் என எண்ணுவர். ஆனால், இந்த பர்திமேயு முற்றிலும் வேறுபட்ட மனிதனாக இருந்தான். இயேசு அழைக்கிறார். அவரண்டை போய்ச் சேரவேண்டும் அதுவும் சீக்கிரம் போய்ச் சேரவேண்டும். இதைத் தவிர வேறு எந்த எண்ணமும் இவன் மனதில் தோன்றவில்லை. தன்னுடைய இந்த எண்ணத்திற்குத் தடையாக எது இருப்பினும் அதை இழக்க இவன் தயாராக இருந்தான்.

நண்பரே! நம்முடைய நிலை என்ன? வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிற வர்களே, நீங்களெல்லாரும் என்னிடத்தில் வாருங்கள் நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன் (மத். 11:28) என்று இயேசு கூவி அழைக் கிறார். தன்னுடைய சரீரத்தில் சுற்றப்பட்டிருந்த மேல் வஸ்திரம், இயேசுவின் அழைப்பை உடனடியாக ஏற்றுக் கொள்ள பர்திமேயுவுக்கு தடையாயிருந்ததைப் போல, அநேகருக்கு "பாவம்" என்ற மேல்வஸ் திரம் தடையாக உள்ளது. பர்திமேயுவுக்காகிலும்ஒரே ஒரு தடைதான் இருந்தது. நமக்கோ ஏராளமான தடைகள். ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமான பாவத் தடைகளில் சிக்கி சீரழிந்து கொண்டுள்ளோம். பாவக் கட்டுகள் பலமாகச் சுற்றப்பட்டுள்ளது, உண்மைதான்.

ஆனால் பர்திமேயுவுக்கு இருந்த வாஞ்சையும், தாகமும், துணிவும் நமக்கு இருக்குமானால் நாமும் இயேசுவண்டை சேரமுடியும். இயேசு யார் என்பதைப் பற்றியதெளிவும், அவரால் எல்லாம் ஆகும் என்ற நம்பிக்கையும், அவரை நம்பினவர்கள் கைவிடப்படுவதில்லையென்ற ஆழமான விசுவாசமும் வேண்டும்.

பாவக் கட்டுகளிலிருந்து எப்படி விடுதலையாவது என்றும் அவைகளை எப்படிக் களைந்தெறிவது என்றும் சிந்தித்து, சிந்தித்து நாட்களை வீணடித்துக் கொண்டிருக்கும் நாம், இந்தக் குருடன் பர்திமேயு வழிநடந்து இயேசுவண்டை வந்து சேர்வோம். விரைந்து சேர்வோம்.

## IV. பார்வை கிடைத்தவுடன், இயேசுவுக்குப் பின் சென்றான் (வச.52)

பர்திமேயு இயேசுவண்டை வந்தவுடன் பார்வையைப் பெற்றுக் கொள்ளவில்லை. வேகமாக வந்த பர்திமேயுவை நோக்கி: "நான் உனக்கு என்ன செய்யவேண்டும் என்றிருக்கிறாய்" (வச. 51) என்றார். அவனுடைய தேவை என்னவென்பதை அவர் அறிந்தே இருந்தார். ஆனாலும், அந்தத் தேவைக்கான மன்றாட்டு, வேண்டுதல் சம்பந்தப்பட்டவர்களிடமிருந்து வரவேண்டுமென்று இயேசு எதிர்பார்த்தார். தேவனுக்கும், கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவுக்கும் எல்லாம் தெரியும் என்பது முற்றிலும் உண்மை. ஆனாலும், நாம் எதையாகிலும் தேவனிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டுமெனில், ஜெபத்தின் மூலம் மன்றாட வேண்டுமென்பதே இதன்பொருள்.

அவன் வேண்டிக் கொண்டதைப் போலவே; பார்வையைக் கொடுத்து "நீ போகலாம் உன் விசுவாசம் உன்னை இரட்சித்து" என்றார் (வ.52). அவனோ பார்வையைப் பெற்றுக் கொண்டு இயேசுவுக்குப் பின்சென்றான்.

நம்மில் அநேகர், இயேசு யார் என்று தெரிந்து அவர் வல்லமையைப்புரிந்து எதிர்படும் தடைகளைத் தகர்த்து, பாவத்தைத் தள்ளி ஆத்தும சுகம் பெற்றுக் கொண்டாலும், அவருக்குப் பின் செல்லுகிற காரியத்தில் தவறு செய்து விடுகிறோம். நம்முடைய காரியம் முடிந்த பின் தேவைகள் சந்திக்கப்பட்ட பின் திசைமாறுகிறோம். நம்முடைய ஆத்தும இரட்சிப்பு உறுதி செய்யப்பட வேண்டுமானால் நாம் தொடர்ந்து அவர் பின் செல்லவேண்டும். அப்போஸ்தலன் பவுலைப்போல ஓட்டத்தை முடிக்கவேண்டும். (II தீமுத் 4.7)

இயேசுவுக்குப் பின் எப்படிச் செல்வோம் என்று தடுமாறுகிறீர்களா? இதோ இந்தக் குருடன் ஏற்கனவே சென்று பாதையமைத்துள்ளான். அவன் வழியே செல்வோம்.

பிரியமானவர்களே! தேவன் நமக்கு பார்த்துப் படிக்கக் கூடிய இரண்டு கண்களைக் கொடுத்துள்ளார். ஆனால் நம்மில் அநேகர் கண்களிருந்தும் குருடர்களாயுள்ளோம். எத்தனையோ காரியங்களைப் படித்து தெளிவு பெறும் நாம், வேதாகமத்தைத் திறந்து பார்ப்பதற்கு மாத்திரம் பிடிவாதமாக மறுக்கிறோம். ஏன் இந்த நிலை?

இயேசு யார் என்பதை நம்மில் அநேகர் தெளிவாக அறியாததினால் தான் இன்று மத மோசடிக்காரர்கள் பலுகிப் பெருகிக் கொண்டிருக்கிறார்கள். அன்று இயேசுவோடு வந்த பெருங்கூட்டம் இயேசு யார் என்று அறியாததைப் போலவே, இன்று பக்தியின் வேஷந்தரித்து, மதத்தின் பேரால் அலையும் மக்களும் இயேசுவைப் பற்றியோ, அவருடைய உபதேசத்தைப் பற்றியோ, அவ்வுபதேசம் சொல்லும் ஒரு சபையைப் பற்றியோ, அதில் அங்கம் வகிக்க வேண்டிய அவசியம் பற்றியோ அறிந்துகொள்ளவில்லை.

நண்பரே! நீ அங்கம் வகிக்கும் கூட்டம் எவ்வளவு பெரிய கூட்டமாக இருந்தாலும், அது உனக்கு ஆத்தும சுகத்தைப் பெற்றுத் தரவே தராது. பர்திமேயுவைப் போல, இயேசு யார் என்பதை அறிந்து கொள். பர்திமேயுவைப் போல தடைகளைத் தகர்த்து எறி. பர்திமேயுவைப் போல் அழைப்பை ஏற்றுக் கொள். பர்திமேயுவைப் போல் பாவமாகிய வஸ்திரத்தை தூக்கிப்போடு. பர்திமேயுவைப் போல் அவருக்குப் பின் செல்ல உன்னை அவருடைய உபதேசத்திற்கு ஒப்புக் கொடு. அதாவது தேவனுடைய வார்த்தைக்கு மாத்திரம் உன்னை ஒப்புக்கொடு. உன் உணர்வுகளைத் தட்டி எழுப்பி கடைசியில், உன் பாக்கட்டில் கை வைக்கும் வசீகரப்பேச்சுக்கு மயங்காதே. ஏனெனில் நீ விரும்பும் பெரிய ஊழியர் அல்ல, நீ அங்கம் வகிக்கும் பெரிய கூட்டம் அல்ல, உன்னுடைய சமுதாய அந்தஸ்தல்ல தேவனுடைய வார்த்தை தான் உன்னை கடைசி நாளில் நியாயந்தீர்க்கும். (யோவா. 12 : 48).

**EZS. ராஜநாயகம்.**

## பிழை திருத்தம்

சென்ற மாத இதழின், ஆசிரியவுரையில் 5-ம் பக்கத்தில் உள்ள முதல் வரியில் 3000 என்ற எண்ணுக்குப் பதில் 350-ம், இரண்டாம் வரியில் 350-க்குப் பதில் 3000-மும் தவறுதலாக அச்சேறிவிட்டது. கவனித்துப் படியுங்கள் தவறுக்கு வருந்துகிறோம்.

- ஆசிரியர்

# பரிசுத்த ஆவியின் வரங்கள் அற்புதங்களா?

பரிசுத்த ஆவியானவரோடு சம்பந்தப்பட்ட எந்த ஒரு காரியமாக இருப்பினும், அது அற்புதமாக இருக்க வேண்டும் என பல மக்கள் கருதுகின்றனர். உதாரணமாக, பரிசுத்த ஆவியின் திருமுழுக்கும், கைகளை வைத்துப் பெறும் அளவிலான பரிசுத்த ஆவியும், அவற்றைப் பெற்றுக் கொள்ளுகிறவர்களுக்கு அற்புதங்களைச் செய்யும் வல்லமையைத் தருகிறது என அவர்கள் நினைக்கின்றனர். அவர்கள் நினைப்பது சரியே. அப்போஸ்தலர்களும் அவர்கள் யார் மேல் கைகளை வைத்தார்களோ அவர்களும் அற்புதங்களைச் செய்யக் கூடியவர்களாக இருந்தனர். என்றபோதிலும், நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டிய முக்கியமான காரியம் என்னவென்றால், குறிப்பிட்ட இந்த அளவில் பரிசுத்த ஆவியின் வல்லமையைப் பெற்றுக் கொண்டவர்கள் இவர்கள் மட்டுமே. இன்று வாழ்ந்து கொண்டிருக்கும் எந்த ஒரு மனிதனும் பரிசுத்த ஆவியின் திருமுழுக்கைப் பெற்றிருக்கவில்லை. ஏனெனில் அப்போஸ்தலர்களும், கொர்நேலியுவும் அவனுடைய வீட்டாரும் மாத்திரமே அந்த அளவிலான பரிசுத்த ஆவியைப் பெற்றிருந்தனர். அவர்கள் அனைவரும் மடிந்து போய் பல ஆண்டுகள் ஆகிவிட்டன. இன்று வாழும் எவரும் கைகளை வைத்துப் பெறும் அளவிலான பரிசுத்த ஆவியைப் பெறவில்லை. ஏனெனில் அப்போஸ்தலர்கள் மட்டுமே இப்படிப்பட்ட அற்புதங்களைச் செய்யக் கூடிய அளவிலான பரிசுத்த ஆவியை தங்கள் கைகளை வைத்துக் கொடுக்கும் வல்லமையைப் பெற்றிருந்தனர். அப்போஸ்தலர்கள் அனைவரும் இறந்து பல ஆண்டுகள் ஆகிவிட்டபடியால், யார் பேரிலும் கைகளை வைத்து பரிசுத்த ஆவியைக் கொடுக்க அவர்கள் இன்று இல்லை.

ஆனால் அப்போஸ்தலருடைய நடபடி 2 : 38ம் வசனத்தில் கூறப்படும் பரிசுத்த ஆவியின் வரங்களும், பரிசுத்த ஆவியின் அற்புத அளவிலானது என பலர் இன்று நம்புகின்றனர். கொர்நேலியுவும் அவன் வீட்டாரும் பெற்றுக் கொண்டதைப் போன்ற பரிசுத்த ஆவியின் திருமுழுக்கும் ஒரு வரம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது உண்மையே. ஆனால் கொர்நேலியும் அவர் வீட்டாரும் பெற்றுக் கொண்ட பரிசுத்த ஆவியின் திருமுழுக்கும் ஒரு வரம் என்று பேதுரு குறிப்பிட்டதுமன்றி, அப்போஸ்தலர்கள் பெற்றுக் கொண்ட

அதேபோன்ற பரிசுத்த ஆவியின் திருமுழுக்கும் ஒரு வரம் என்று தான் அவர் குறிப்பிட்டார். "ஆதலால் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசித்திருக்கிற நமக்குத் தேவன் வரத்தை அநுக்கிரகம் பண்ணினது போல அவர்களுக்கும் அந்த வரத்தையே அநுக்கிரகம் பண்ணியிருக்கும்போது தேவனைத் தடுக்கிறதற்கு நான் எம்மாத்திரம் என்றான்" (அப். 11 : 17). கொர்நேலியுவுக்கும் அவன் வீட்டாருக்கும் பரிசுத்த ஆவியின் திருமுழுக்கைக் கொடுத்ததின் மூலம், புறஜாதியாரும் யூதர்களைப் போலவே தேவனால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தனர் என்பதை கர்த்தர் அவர்களுக்குக் கற்பித்ததாக பேதுரு காட்டுகிறார்.

ஆம், பரிசுத்த ஆவியானவரின் திரு முழுக்கு ஒரு வரம் தான். அதே போல, அப்போஸ்தலர்கள் கைகளை வைத்துக் கொடுக்கும் அளவிலான பரிசுத்த ஆவியும் ஒரு வரமே. ஆனால் அப். 2 : 38ல் குறிப்பிட்டுள்ள பரிசுத்த ஆவியின் வரம் வேறுவித வரமாகும்; அது இந்த சந்தர்ப்பத்தில், அற்புதங்கள் செய்ய முடியாத அளவிலான பரிசுத்த ஆவியின் வரம். ஆனால் இதை அறிவது எப்படி? பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெற்றுக் கொண்டவர்கள் என அப். 2 : 38ல் குறிப்பிடப்படுபவர்கள், அந்த ஆவியின் வல்லமையால் அற்புதங் களைச் செய்ய முடிந்ததா இல்லையா என்றோ, அல்லது அந்நிய பாஷைகளில் பேச முடிந்ததா இல்லையா என்றோ அந்த வசனப் பகுதியை நாம் படித்துக் கூறமுடியும்.

நினைவிருக்கட்டும், நாம் அப்போஸ்தலருடைய நடபடி 6ம் அதிகா ரத்திற்கு வரும்போது, பல்லாயிரக்கணக்கான மக்கள் தேவனுக்கு கீழ்ப் படிந்திருந்தார்கள். எனவே பரிசுத்த ஆவியின் வரத்தை அவர்கள் பெற்றிருந்தனர். இப்போது, அற்புதங்களைச் செய்யும் அளவிலான பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ளத்தக்கதாக அப்போஸ்தலர்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட ஏழு சீடர்களின் மேல் கைகளை வைத்தனர். பரிசுத்த ஆவியின் வரமானது, அற்புதங்களைச் செய்யும் அளவிலான பரிசுத்த ஆவியாகவும் அதைப் பெற்றுக் கொண்டவர்கள் அற்புதங் களைச் செய்யும் வல்லமையை அடையக்கூடியவர்களாகவும் இருந்தால், பின்னர் ஏன் அந்தச் சமயத்திலே ஏழு பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்கள் மேல் ஏன் அப்போஸ்தலர்கள் கைவைக்க வேண்டியதா யிற்று? சீடர்களிலிருந்து ஏழு பேர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்ற அப்போஸ்தலர்களின் நிபந்தனையையும், அவர்கள் பரிசுத்த ஆவியால் நிறைந்திருக்க வேண்டுமென்பது குறிப்பிட்ட தேவைகளில் ஒன்று என்பதையும் கூட தயவு செய்து கவனியுங்கள். ஆனால், பரிசுத்த ஆவியால் நிறைந்திருப்பவர்கள் அற்புதங்களைச் செய்யக் கூடுமானால்,

பின்னர் அவர்கள் மேல் கை வைக்க வேண்டிய அவசியம் அப்போஸ் தலர்களுக்கு ஏற்பட்டிருக்காது. ஆனால் ஒருவர் பரிசுத்த ஆவியால் நிறைந்திருந்தால், அவர் அற்புதங்களைச் செய்யும் வல்லமையைப் பெற்றிருக்கிறார் என அர்த்தம் அல்ல என்பது தெளிவு. அப்படி யானால் பரிசுத்த ஆவியால் நிறைந்திருப்பது என்பதற்கு அர்த்தம் என்ன? பரிசுத்த ஆவியின் வரத்தை அவர்கள் பெற்றிருந்தார்கள் அல்லது கர்த்தருக்கு யார் கீழ்ப்படிந்தார்களோ அவர்களுக்கு பரிசுத்த ஆவியானவர் அருளப் பெற்றார் என்று மட்டுமே அதற்கு அர்த்தம்.

தேவனுக்குக் கீழ்ப்படிபவர்கள் பரிசுத்த ஆவியைப் பெறுகின்றனர் என்றும், தேவனுடைய ஆலயமாகிய நமது சரீரத்தில் பரிசுத்த ஆவியா னவர் வாசம் செய்கிறார் என்றும், கிறிஸ்து நம்மில் வாழ்கிறார் என்றும் வேதாகமத்தில் பல வசனங்கள் நமக்குக் கூறுகின்றன. (அப். 5 : 22; *1* கொரி. 3 : 16, 17; *1* கொரி. 6 : 19, 20; கொலோ. 3 : 27; எபே. 4 :6). இப்போது, மேலே கண்டவற்றில் எதுவும் இயற்கைக்கு விரோதமா னதல்ல, அதாவது, அற்புதங்கள் அல்ல. ஒருவன் மீண்டும் பிறப்பது எப்படி? தேவனின் கிருபை நம்மை எவ்வாறு இரட்சிக்கிறது? நமது இருதயங்களில் விசுவாசம் எப்படி இயங்குகிறது? இவை அனைத்திலும் அற்புதங்களைக் காணும் சிலர் இருக்கின்றனர். ஒரு குழந்தை பிறப்ப தையும், ஒரு கார் விபத்திலிருந்து காப்பாற்றப்படுவதையும், ஒரு அறுவை சிகிச்சை அல்லது ஒரு பயங்கர வியாதியிலிருந்து விடுபட்டு சுகமடைவதையும் கூட அவர்கள் அற்புதம் என்பர். ஆனால், சரீர சம்பந்தப்பட்டதோ அல்லது ஆவிக்குரியதோ இவை அனைத்திலும் அற்புதங்கள் எதுவும் கிடையாது. உண்மையென்னவென்றால், சரீர, ஆவி சம்பந்தப்பட்ட சகல காரியங்களையும் தேவன் அற்புதங்களின் வழியாகவே ஆரம்பித்தார். பின்னர் அவ்வித அற்புதச் செயல்களின் இடத்தை, சரீர, ஆவி சம்பந்தமான சட்டங்களால் மாற்றினார். எனவே, குழந்தைகள் அற்புதத்தால் பிறப்பதில்லை, மாறாக குழந்தைப் பிறப்பின் இயற்கைச் சட்டத்தின்படி அவை பிறக்கின்றன. இதுவே பிற அனைத்து உலக காரியங்களிலும் நடந்து வருவதே உண்மை. ஒவ்வொரு காரியத் தையும் ஒழுங்குபடுத்தும் சட்டங்கள் உள்ளன. ஆவிக்குரிய காரியங்க ளிலும் இதுவே உண்மை. கிறிஸ்து அற்புதங்களைச் செய்தார்; அது போலவே பரிசுத்த ஆவியின் வல்லமையைப் பெற்ற அப்போஸ்தலர் களும், தேர்ந்தெடுக்கப்பட்ட சில சீடர்களும் செய்தனர். ஆனால் பின்னர் மனிதனுடைய நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்த தேவனுடைய வசனம் கொடுக்கப்பட்டது. அதன்பின்னர் தொடர்ந்து சகல ஆவிக் குரிய காரியங்களும் எழுதப்பட்ட வசனத்தின்படியே ஒரே சீராக நடைபெற்று வருகின்றன.

இப்போது, சரீர சம்பந்தமான உலகில் இன்று நடைபெற்று வரும் பல காரியங்களை இன்னும் நாம் புரிந்து கொள்ள முடியாமல் இருக் கிறோம். சிலர் அவைகள் அற்புதமாக நடைபெறுவதாகக் கூறுகின்

றனர். ஆனால் அது உண்மையல்ல. நடைபெற்று வரும் சகல காரியங்களையும் நாம் புரிந்து கொள்ள முடியாதவர்களாக இருப்பதால் மட்டும் அவை அற்புதங்கள் ஆகிவிடுவதில்லை. மாறாக, அவை அனைத்தும் தேவன்அளித்த சரீர சம்பந்தமான சட்டங்களின்படி நடைபெறுகின்றன. ஆவிக்குரிய காரியங்களிலும், நடைபெறும் பலவற்றை நாம் முற்றிலுமாக புரிந்து கொள்ள முடியாதவர்களாக இருக்கிறோம். அதனால், அவை அற்புதமாக நடைபெறுகின்றன என சிலர் கூற விரும்புகின்றனர். இன்னும் சிலரோ இதற்கு நேர் எதிர்முனைக்குச் சென்று, ஆவிக்கும் மனிதனுக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது என்கிறார்கள். வேறு விதமாகக் கூறினால், கிறிஸ்தவனில் ஆவி உண்மையிலே குடியிருப்பதையும், அல்லது கிறிஸ்தவனில் தேவனும் கிறிஸ்துவும் வாசம் செய்வதை எதிர்ப்பவர்களாகவும் இருக்கின்றனர். ஜெபத்தையும் தேவனுடைய வழி நடத்துதலையும் அர்த்தமற்ற செயல்கள் எனக் கூறுகின்றனர். இப்படிப்பட்ட மனிதர்கள் தவறு செய்கின்றனர். எல்லா காரியங்களுமே (இயற்கைக்கு விரோதமான) அற்புதங்களாக நடைபெறுகின்றன என சிலர் போதித்து வருவதின் எதிர் விளைவாகத் தான் தேவனுடைய வழி நடத்துதலை ஏற்றுக் கொள்ள மறுக்கின்றவர்களும் இருக்கின்றனர்.

பரிசுத்த ஆவியின் வரம் அற்புதமல்ல என்னும் அதே வேளையில், தேவனுக்குக் கீழ்ப்படியும் ஒவ்வொருவருக்கும் பரிசுத்த ஆவியானவர் அருளப்படுகிறார். எனவே, கிறிஸ்தவன் தனது இரட்சிப்பின் அடையாளமாக ஆவியைப் பெற்றுக் கொள்ளுகிறேன். (2 கொரி. 1 : 22; 2 கொரி. 5 :5; எபே. 1 : 14). ஆகவே, கர்த்தரில் நாம் இருக்கிறோம் என்றும், கர்த்தர் நம்மில் இருக்கிறார் என்றும் நாம் விசுவாசிக்கிறோம். தேவன் ஜெபங்களைக் கேட்கிறார் என்றும், அவைகளுக்குப் பதிலளிக்கிறார் என்றும், கர்த்தர் நம்மை வழி நடத்துகிறார் என்றும் நாம் விசுவாசிக்கிறோம்.

அதே சமயத்தில், ஆவி, ஜெபம், தேவனின் வழிநடத்துதல், மற்றும் பரிசுத்தமும் தெய்வீகமான சகலமும் இன்று, புதிய ஏற்பாட்டில் கண்டபடி, ஆவியின் வசனத்திற்கு அல்லது தேவனுடைய வார்த்தைக்கு ஏற்றபடி ஒழுங்காக நடைபெற்று வருகின்றன என்பதை நாம் விசுவாசிக்கிறோம்.

நமது வாழ்விலும், நாம் கற்பிக்கும் காரியங்களிலும் ஒரு சிறு விஷயங்கூட, சுவிசேஷத்தில் எழுதப்பட்டுள்ள ஒரு வார்த்தைக்கும் முரணாக இருப்பதில்லை.

J.C. சோட்.

## பெண்கள் பகுதி

கிறான் என அறிவிக்கப்படுகிறது. தேவனுடைய நட்பு மாத்திரம் நமக்குப் போதுமானது என்று

# நட்பு

ஒரு நண்பன், தேவனால் நமகது அளிக்கப்பட்ட அருமையான ஆசீர்வாதமாகும். நமது வாழ்வில் வரும் நல்ல நேரங்களில் மிகவும் மகிழ்ச்சியாக நாம் இருக்கவும், கெட்ட நேரங்களில் நமக்கு மிகவும் ஆறுதலாக இருக்கவும் நண்பர்கள் பெரிதும் உதவுகின்றனர். எனவே தான், "சந்தோஷப்படுகிறவர்களுடனே சந்தோஷப்படுங்கள்; அழுகிறவர்களுடனே அழுங்கள்" (ரோமர் 12 : 15) என அப்போஸ்தலர் பவுல் கிறிஸ்தவர்களுக்குக் கூறுகிறார்.

ஒரு விசுவாசியின் மிகப் பெரிய நண்பன் தேவன் தான் என்பதில் சந்தேகமில்லை. ஆபிரகாம் தேவனுடைய நண்பன் என அழைக்கப்பட்டதாக 2 நாளாகமம் 20 : 7ம் வசனத்தைக் குறிப்பிட்டு, யாக்கோபு 2 : 23ல் கூறுகிறார். "ஒருவன் தன் சிநேகிதனோடே பேசுவது போல, கர்த்தர் மோசேயோடே முகமுகமாய்ப் பேசினார் . . . ." என யாத்திராகமம் 33 : 11ம் வசனம் கூறுகிறது.

யாக்கோபு 4 : 4ம் வசனத்தில் " . . . . . ஆகையால் உலகத்துக்குச் சிநேகிதனாயிருக்க விரும்புகிறவன் தேவனுக்குப் பகைஞனா

இதற்கு அர்த்தமா? இந்த உலகில் நாம் நண்பர்களை விரும்பக்கூடாது என்று அர்த்தமா? இல்லை! "உலகத்து நண்பன்" என்றால் உலக (தேவனுக்கு விரோதமான) காரியங்களில் பங்கு கொள்ளுபவன் (ஆதரிப்பவன்) எனப் பொருள் என்பதாக நாம் புரிந்து கொள்ளுகிறோம். நாம் எவ்வாறு ஒரு நண்பனாக இருக்க வேண்டும் என நமக்கு தேவன் அறிவூட்டி, மக்களுடன் நமது நட்பை அனுமதிக்கிறார். தேவனுடைய வசனத்தில் நட்பைப் பற்றிக் காணப்படும் ஒரு சில உண்மைகளை நாம் பார்ப்போம்.

### 1. ஒரு நண்பன் நமது மனதிற்கு மகிழ்வூட்டுகிறான்.

"பரிமள தைலமும் சுகந்த தூபமும் இருதயத்தைக் களிப்பாக்குவதுபோல, ஒருவனுடைய சிநேகிதன் உட்கருத்தான ஆலோசனையினால் பாராட்டும் இன்பமானது களிப்பாக்கும்". (நீதி. 27 :9).

### 2. ஒரு நண்பன் உண்மையுள்ளவனாக இருப்பான்.

"சிநேகிதன் அடிக்கும் அடிகள் உண்மையானவைகள்; சத்துரு

இடும் முத்தங்களோ வஞ்சனையுள்ளவைகள்" (நீதி. 27 : 6).

"நான் உங்களுக்குச் சத்தியத்தைச் சொன்னதினாலே உங்களுக்குச் சத்துருவானேனோ?" (கலா. 4 : 16).

நாம் சாமர்த்திய மற்றோ, கடினமாகவோ இருக்க வேண்டுமென்று அர்த்தமல்ல! நாம் எப்போதுமே அன்புடன் சத்தியத்தைக் கைக் கொள்ள வேண்டும். (எபே. 4 : 15).

## 3. நட்புக்கு முயற்சி தேவை:

"சிநேகிதருள்ளவன் சிநேகம் பாராட்டவேண்டும்; சகோதரனிலும் அதிக சொந்தமாய்ச் சிநேகிப்பவனுமுண்டு". (நீதி. 18 : 24).

## 4. துன்பமான வேளைகளில் ஒரு நண்பன் உதவுகிறான்

"ஒண்டியாயிருப்பதிலும் இருவர் கூடி இருப்பது நலம்! அவர்களுடைய பிரயாசத்தினால் அவர்களுக்கு நல்ல பலன் உண்டாகும். ஒருவன் விழுந்தால் அவன் உடனாளி அவனைத் தூக்கிவிடுவான்; ஒண்டியாயிருந்து விழுகிறவனுக்கு ஐயோ, அவனைத் தூக்கி விடத்துணையில்லையே. இரண்டு பேராய்ப் படுத்துக் கொண்டிருந்தால் அவர்களுக்குச் சூடுண்டாகும்; ஒண்டியாயிருக்கிறவனுக்குச் சூடுண்டாவது எப்படி? ஒருவனை யாதாமொருவன் மேற்கொள்ள வந்தால் இருவரும் அவனுக்கு எதிர்த்து நிற்கலாம்; முப்புரிநூல் சீக்கிரமாய் அறாது". (பிரசங்கி 4 : 9-12). "சிநேகிதன் எல்லாக் காலத்திலும் சிநேகிப்பான்; இடுக்கணில் உதவவே சகோதரன் பிறந்திருக்கிறான்". (நீதி. 18 : 17).

பிதாவாகிய தேவனைப்பற்றி இக்காரியங்கள் யாவும் சொல்லப்பட்டிருந்தாலும், மனித நண்பர்கள் நமது மனிதத் தேவை என்பதையும் அவர் அடையாளங் காணுகிறார். இயேசு தம்மையே ஒரு நண்பனாகக் காட்டினார். அவர் இவ்வுலகத்தில் மனிதனாகவும், அதே சமயத்தில் தேவனாகவும், இருந்தபடியால் நாம் உணரும் அதே தேவைகளையும் உணர்ச்சிகளையும் அவரும் உணர்ந்தார்.

பேதுரு, யாக்கோபு, யோவான் ஆகிய மூன்று அப்போஸ்தலர்களும் இயேசுவுடன் தனிப்பட்ட உறவை வைத்திருந்தனர். ஜெப ஆலயத் தலைவர்களில் ஒருவனான யவீருவின் மரித்துப்போன மகளை இயேசு உயிரோடு எழுப்பும்போது, இந்த மூன்று பேரையும் தம்மோடு இருக்க அனுமதித்தார். (மாற்கு 5 : 37). இயேசு மறுரூபமானபோது, மோசேயும் எலியாவும் தோன்றி வரப்போகும் அவருடைய மரணத்தைப் பற்றி அவருடன் பேசிய போது, இம்மூவரும் அவருடனே கூட மலை மீது இருந்தனர். (லூக்கா 9 : 28 - 31). இயேசு

காட்டிக் கொடுக்கப்பட்டு, கைது செய்யப்பட்ட இரவில் கெத் செமனே தோட்டத்திற்குள் தொலைவில் சென்று ஜெபம் செய்ய இதே மூன்று பேர்களும் தான் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தனர். (மத். 26 : 36 - 46).

இயேசுவின் சிறப்பு நண்பர்களாக இடம் பெற்ற மற்றும் மூவர் பெத்தானியாவில் வசித்து வந்த லாசரு, மார்த்தாள், மரியாள் என்ற சகோதரனும் சகோதரிகளுமாவர். இயேசுவை மிகவும் உபசரித்து வந்த இந்தக் குடும்பம் அவருடைய இருதயத்தில் சிறப்பான ஒரு இடத்தைப் பிடித்துக் கொண்டிருந்தது. (லூக்கா 10 : 38 - 42; யோவான்12 : 1- 9). லாசரு மரணப்படுக்கையில் இருக்கையில், அவனுடைய சகோதரிகள் இயேசுவுக்குச் சொல்லி அனுப்பினார்கள். "ஆண்டவரே, நீர் சிநேகிக்கிறவன் வியாதியாயிருக்கிறான் . . ." (யோவான் 11 : 3). 5வது வசனத்தில் யோவான் நமக்குச் சொல்லுகிறார் : "இயேசு மார்த்தாளிடத்திலும் அவளுடைய சகோதரியினிடத்திலும் லாசருவினிடத்திலும் அன்பாயிருந்தார்". தங்கள் அருமைச் சகோதரன் மரணமடைந்து விட்டதற்காக வருத்தமும் வேதனையும் அடைந்திருந்த மார்த்தாளையும் மரியாளையும் இயேசு கண்டதும் அவர், ". . . . ஆவியிலே கலங்கித் துயரமடைந்து : 'அவனை எங்கே வைத்தீர்கள்?' என்றார். ஆண்டவரே, வந்து பாரும் என்றார்கள். இயேசு கண்ணீர் விட்டார். அப்பொழுது யூதர்கள் : 'இதோ, இவர் அவனை எவ்வளவாய்ச் சிநேகித்தார்' என்றார்கள்." (வசனங்கள் 33-36). பின்னர், இயேசு ஒரு அதிசயமான அற்புதத்தைச் செய்தார். லாசருவை உயிரோடு எழுப்பி அவனுடைய குடும்பத்திற்கு அவனை கையளித்தார்! ஆம், இந்தக் குடும்பம் இயேசுவுக்கு உண்மையிலேயே நெருங்கிய ஒன்றாக இருந்தது என்பது தெளிவு.

பிதாவாகிய தேவனும், இயேசுவும் நட்பை மிகவும் முக்கியமாகக் கருதுவதால், இப்போதுள்ள நமது நட்பைப் பலப்படுத்துவோம், புதிய நட்புகளை நமது வாழ்வில் வளர்ப்போம்.

தமிழில் : ரேச்சல் நாயகம்.

**நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டுமென்றே இவைகளை உங்களுக்குக் கற்பிக்கிறேன்.**

**யோவா 15 : 17**

# திருமுழுக்கின் அழகும், அவசியமும்

பாவத்திலிருந்து இரட்சிக்கப்படுவது ஒவ்வொரு ஆணுக்கும் பெண்ணுக்கும் மிகவும் அவசியத் தேவையாக இருக்கிறது. மனுக்குலத்திற்கு தேவனின் மகத்தான செய்தி என்னவென்றால் : "தேவன், தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்". (யோவான் 3 : 16) மீண்டுமாக, "நாம் பாவிகளாய் இருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப் பண்ணுகிறார்." (ரோமர் 5 : 8). "நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்." (2 கொரி 5 : 21).

நமது பாவங்களுக்குப் பரிகாரமாக, தேவன் தமது குமாரனை இவ்வாறாக சிலுவையில் மரிக்கக் கொடுத்தார். இதைத்தான் நமது இரட்சிப்புக்கு தேவன் செய்திருக்கிறார். நமது பாவங்களிலிருந்து இரட்சிப்படைய நாம் என்ன செய்ய வேண்டும்? தேவனின் இரட்சிப்பின் வழியின்படி : கிறிஸ்து பாவிகளுக்காக மரித்தார் என ஒருவன் கிறிஸ்துவை விசுவாசிக்க வேண்டும், பாவங்களிலிருந்தும் அறியாமையிலிருந்தும் மனந்திரும்பி அல்லது விடுபட்டு, இவ்வாறாக பாவங்களுக்கு மரிக்க வேண்டும்; கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என அறிக்கை செய்யவேண்டும்; பின்னர் அவன் திருமுழுக்குப் பெற வேண்டும், அதாவது, ஒரு மரித்த மனிதனின் அடக்கத்தை தெரிவிக்க, சரீரத்தில் அல்லது தண்ணீராகிய கல்லறையில் அடக்கம் செய்யப்பட அல்லது மூழ்க வேண்டும்; பின்னர் புது மனிதனாக உயிர்த்தெழுவதை விவரிக்க தண்ணீராகிய கல்லறையிலிருந்து வெளிவரவேண்டும். இந்த முறையின்படிதான் ஒரு மனிதன் ஆவிக்குரிய புதுப்பிறவியெடுக்கிறான். இப்படியாக, கிறிஸ்து நிக்கோதேமுவுக்கு யோவான் 3 : 5ம் வசனத்தில் கூறியபடி, தேவனுடைய இராஜ்ஜியத்திற்குள் நுளைய உரிமையுள்ளவனாகிறான்: "ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்". கிறிஸ்து நமது

பாவங்களுக்காக மரித்து, அடக்கம் செய்யப்பட்டு சுவிசேஷத்தில் கூறப்பட்டபடி உயிர்த்தெழுந்தார் (1 கொரி 15 : 1 -4 ) என்ற இரட்சிப்பின் நற்செய்தியை விவரிக்க, ஒருவன் இருதயத்தில் விசுவாசித்து, மனதில் மனந்திரும்பி, வாயால் அறிக்கை செய்து தண்ணீரில் திருமுழுக்குப் பெறுகிறான். இவ்வாறாக, திருமுழுக்கானது மிகவும் அழகும் அதிசயமும், இரட்சிப்புக்குத் தேவையான முக்கியமான கீழ்ப்படியும் நடவடிக்கைகளில் ஒன்றாகவும் இருக்கிறது. கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்ப்பு ஆகிய நற் செய்திகள், திருமுழுக்கு என்னும் செயல்மூலமாக அறிவிக்கப்படுகிறது. இரட்சிப்பை அடையும் முன்பு, பாவங்களின் மன்னிப்பை பெறும் முன்பு, ஒருவன் திருமுழுக்குப் பெற வேண்டும். நமது இரட்சகர் கூறியதைக் கேளுங்கள் : "விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்", (மாற்கு 16 : 16). ஆவியால் நிரம்பிய அப்போஸ்தலன் பேதுரு கற்பித்ததைக் கவனியுங்கள்: "நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்". (அப். 2 : 38).

எபேசியர் 1 : 3ம் வசனத்தின்படி, எல்லா ஆவிக்குரிய ஆசீர்வாதங்களும் கிறிஸ்துவில் இருக்கின்றன என வேதாகமம் கூறுகிறது. கிறிஸ்துவில், அவருடைய இரத்தத்தின் மூலமாக நமக்கு மீட்பும், பாவங்களுக்கு மன்னிப்பும் கிடைப்பதாக கொலோசெயர் 1 : 14ம் வசனம் கூறுகிறது. இப்போது, சகல ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை அடையவும், அவருடைய இரத்தத்தால் மீட்பும், பாவங்களின் மன்னிப்பும் பெற்றிட, நாம் கிறிஸ்துவை அடைவது எப்படி? ஏவப்பட்ட அப்போஸ்தலன் பவுல் இதற்குப் பதில் அளிக்கிறார் : " ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனை பேரோ, அத்தனை பேரும் கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டீர்களே" (கலா 3 : 27). மற்றுமோர் இடத்தில், ரோமர் 6 : 3 - 5 வசனங்களில், அவர் கூறுகிறார் : "கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டது போல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம் பண்ணப்பட்டோம். ஆதலால் அவருடைய

மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால், அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம்".

சுவிசேஷத்தின் இந்த வசனப்பகுதியின் மூலம் திருமுழுக்கின் மிக முக்கியத்துவத்தை நாம் அறிவது மட்டுமின்றி, திருமுழுக்கு என்னும் செயல், கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்ப்பு ஆகிய நற்செய்தியை எவ்வளவு அழகாக விவரிக்கிறது, குறிப்பிடுகிறது, படம் பிடித்துக் காட்டுகிறது என்பதையும் நாம் அறிந்து கொள்ளுகிறோம். மனிதனின் இரட்சிப்பு என்னும் பெரும் பணியை முடித்து விட்டு, பரலோகத்திற்கு அவர் மீண்டும் செல்லும் போது, தமது சீடர்களுக்கு அளித்த இரட்சிப்பின் மகத்தானத் திட்டத்தில் திருமுழுக்கையும் கர்த்தர் ஏன் சேர்த்தார் என்பதில் வியப்பொன்றுமில்லை. அவர்களிடம் அவர் பேசிய கடைசி வார்த்தைகள் : "ஆகையால் நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீடராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே ஞானஸ்நானம் கொடுங்கள்". (மத். 28 : 19).

**Sunny David** — சன்னி டேவிட்


## பாட்டுப் புத்தகம் கிடைக்கும்

**20MM** ரெக்ஸின் அட்டை போட்டு, சிறந்த முறையில் பைண்டிங் செய்யப்பட்ட சுமார் 226 கிறிஸ்தவ பாடல்கள் அடங்கிய பாட்டுப் புத்தகங்கள் விற்பனைக்கு உள்ளன. தபால் செலவு உட்பட ஒரு பாட்டுப் புத்தகத்தின் விலை ரூ. 10/- மட்டுமே.

வேண்டுவோர் தொடர்பு கொள்க
E.Z.S. ராஜநாயகம்
கிறிஸ்துவின் சபை, தாராபுரம் ரோடு,
காங்கயம் 638 701

# இயேசு கிறிஸ்து, தேவனின் குமாரன்

இயேசு கிறிஸ்து ஒரு நல்ல மனிதராக இருந்தார். ஆனால் அவர் தேவகுமாரன் அல்ல என்று சிலர் சொல்லி வருகின்றனர். அவர் ஒரு நல்ல மனிதராக இருந்தார் என ஏன் சொல்லுகின்றனர்? புதிய ஏற்பாடு அவரைப் பற்றிக் கூறுபவைகளிலிருந்து அவ்வாறு சொல்லுகிறார்கள். இயேசு பரலோகத்திலிருந்து இறங்கி வந்தார். அவர் தேவனின் குமாரனாக இருந்தார் ஏன் மீண்டும், மீண்டுமாக இயேசுவே கூறினார் என்று அதே புதிய ஏற்பாடு தான் சொல்லுகிறது. அவர் தம்மைத்தாமே யாரென்று சொன்னாரோ அப்படி அவர் இல்லையென்றால், அவர் ஒரு நல்ல மனிதராகக் கூட இருக்க முடியாது. ஏனென்றால், தம்மைப் பற்றிய உண்மையற்ற காரியங்களை ஒரு நல்ல மனிதர் கூறுவதில்லை.

கிறிஸ்தவர்கள் தேவனுடைய பிள்ளைகள். ஏனெனில் தேவனுடைய வார்த்தையால் அவர்கள் ஜெநிப்பிக்கப்பட்ட மக்களாவர் (யாக்கோப்பு 1:18) ஆனால் இயேசு மட்டுமே தேவனுடைய ஒரே குமாரனாக இருக்கிறார். கன்னியான அவருடைய தாய் மரியாள், பரிசுத்த ஆவியானவரால் அற்புதமாகக் கர்ப்பம் தரித்து தேவனால் ஜெநிப்பிக்கப்பட்டார்.

இயேசு கிறிஸ்து தேவனின் குமாரனும், எல்லா மக்களின் இரட்சகருமாவார். சகல மக்களின் பாவங்களுக்காக ஒரு ரோமச் சிலுவையில் அவர் மரித்தார். மூன்று நாட்களுக்குப் பின்னர், அவருடைய பிதாவாகிய தேவன், நம்மை அவர் நியாயந் தீர்ப்பதற்காக அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினார். (ரோமர் 4 : 24, லூக்கா 24 : 46, 47, 1 கொரிந்தியர் 15 : 1 - 3).

எல்லாருக்காகவும் இயேசு மரித்தார் என்ற உண்மையால், எல்லாருமே இரட்சிக்கப்படுவார்கள் எனப் பொருள் அல்ல. இயேசு கிறிஸ்துவை முழுமனதோடு நம்புவோர் மட்டுமே இரட்சிக்கப்படுவர். அவரை முழு மனதோடு நம்புவது என்றால், அற்புதமான அந்த நற்செய்தியையும், தேவனின் அற்புதமான குமாரனையும் விசுவாசிக்க வேண்டும் என்று அர்த்தம். அதோடு உங்கள் பாவங்களிலிருந்து மனந் திரும்பவும், அவரில் உங்களுடைய விசுவாசத்தை அறிக்கை செய்யவும், கிறிஸ்துவின் இரத்தத்தின் வல்லமையால் உங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட, தண்ணீரில் முழுகி, எழுந்து திருமுழுக்குப் பெற்றுக் கொள்ளவும் வேண்டும் என்றும் அர்த்தம். (யோவான் 8 : 21 - 24 ரோமர் 10 : 8-10, 6:3,4: கொலோ 2 : 12).

இயேசுவைப் பற்றிய நற்செய்தியை விசுவாசித்து, திருமுழுக்குப் பெறுகிறவன் இரட்சிக்கப்படுவான் என்று இயேசு கூறினார். (மாற்கு 16 : 15, 16) கிறிஸ்துவை விசுவாசிப்பவர்களுக்கு, பேதுரு கூறினார். "நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவ மன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்" (அப் 2 : 38) இப்படிச் செய்பவர்களை, கர்த்தர் தமது சபையில் சேர்த்துக் கொள்ளுகிறார் (அப் 2 : 41, 47) இக்காரியத்தில் உங்களுக்கு உதவி தேவையென்றால், தயவு செய்து உங்களுக்கு அருகிலுள்ள கிறிஸ்துவின் சபையை அணுகுவீர்.

**Basil Overton** எஸ். எஸ். ராஜன்.

## சொன்னார்கள்...

"தேவன் மனிதனுக்கு அளித்த சகலவற்றிலும் மிக சிறந்த கொடை வேதாகமம் என நான் நம்புகிறேன்; உலக இரட்சகரின் சகல நற்பண்புகளும் இப்புத்தகத்தின் வழியாக நமக்கு சொல்லப்பட்டுள்ளது."

- ஆபிரகாம் லிங்கன்

"தேவனும் வேதாகமும் இல்லையென்றால் உலகத்தை ஒழுங்காக ஆள முடியாது."

- ஜார்ஜ் வாஷிங்டன்

"வேதாகமம் வெறும் புத்தகம் அல்ல; தன்னை எதிர்க்கும் எல்லாவற்றையும் வெற்றிகொள்ளும் வல்லமை படைத்த ஒரு உயிருள்ள ஜீவன்."

- நெப்போலியன்

"இதுவரை வெளிவந்த மற்ற எல்லா புத்தகங்களைக் காட்டிலும் வேதாகமம் விலை மதிப்பற்றது."

- பாட்ரிக் ஹென்றி

# நமது செயல்களை மூடி மறைக்கவும், நியாயப்படுத்தவும் நாம் கூறும் போலி சமாதானங்கள்

தங்களுடைய செயல்களை நியாயப்படுத்த முயற்சிப்பதில் மக்கள் தீவிரமாக இருப்பதுண்டு. "எல்லாரும் அதைச் செய்கிறார்கள்" என நாம் அடிக்கடி கேட்பது இதற்கு உதாரணமாகும். அது பொய் பேசுவதோ, நேர்மையற்ற செயலோ, விபச்சாரமோ, இலஞ்சம் வாங்குவதோ அல்லது கொடுப்பதோ அல்லது இது போன்ற ஆயிரக்க ணக்கான பிற காரியங்களைச் செய்யும் ஒருவன் கூறும் போலிச் சமாதானம் "எல்லாரும் அதைச் செய்கிறார்களே" என்பது தான். குற்றம் செய்பவனில் அதே பாதையில் நாமும் நடப்பது சரிதான் என்று தவறைச் செய்பவன் நினைக்கிறான். சந்தேகமின்றி, எல்லாருமே அதைச் செய்வது இல்லை. ஆனால் ஒருவேளை, எல்லாருமே அப்படிச் செய்வதாக இருப்பின், அது சரியாகி விடுமா? ஒரு காரியம் தவறு என்றால், எத்தனை பேர் அதைச் செய்தாலும் அது தவறாகத் தான் இருக்கமுடியும். ஒரு காரியம் சரியென்றால், பிறர் அதைச் செய்யாவிட் டாலும் நாம் அதைச் செய்ய வேண்டும். சரியாகச் செய்யும் ஒரு சிலரில் நாமும் ஒருவராக இருந்தால், தவறும் கெட்டதுமான செயலிலிருந்து விலகி சரியானதைச் செய்யும் நம்மை உலக மக்கள் மதிப்பார்கள். (ரோமர் 13 : 13; 1தெசெ. 4 : 12).

நல்ல காரியங்களைச் செய்யாமல் இருப்பதை நியாயம்படுத்த சில வேளைகளில் நாம் சாக்குப் போக்குகளைச் சொல்ல முயற்சிக்கிறோம். ஆராதனையில் கலந்து கொள்ள மக்களை அழைப்பது ஒரு வீண் வேலை எனக் கூறுபவர்களும் சபையில் இருக்கின்றனர். தங்களுடைய நண்பர்களையும் பிறரையும் பல தடவைகளில் அழைத்தாலும், ஆராத னைக்கு வரவோ அல்லது வேதாகமப் பாடங்கள் படிக்கவோ அவர்க ளுக்குச் சிறிதும் ஆர்வமில்லை என அவர்கள் கூறுகின்றனர். இப்படிப்பட்ட கிறிஸ்தவர்கள் பிறருக்குப் போதிப்பதை விட்டு விட்டி ருக்கின்றனர். ஆனால் பிரட்சனை என்னவென்றால், மக்களுக்கு ஆர்வ மில்லை என்பதாக பலதடவைகள் பிறர் கூறக்கேட்டு, அவர்களும் அதேபோல் சொல்ல ஆரம்பிக்கின்றனர். இது சாத்தானுடைய ஒரு விளம்பர தந்திரம். இதில் கர்த்தரின் மக்கள் பலர் வீழ்ந்து போயிருக்கின் றனர். ஒரு தொழிலதிபர் இதே போன்ற ஒரு காரணத்தை உபயோ

கித்தால் எப்படியிருக்கும்? "நான் உற்பத்தி செய்த பொருளை விற்க முயற்சிப்பதில் பலன் எதுவுமில்லை; ஏனென்றால் ஒருவருக்கும் அதில் ஆர்வமில்லை, யாரும் அதை வாங்கமாட்டார்கள்". இந்த நிலையை அந்தத் தொழிலதிபர் தொடர்ந்தால், விரைவில் பெரும் நஷ்டத்திற் குள்ளாகி சாப்பாட்டிற்கே தாளம் போட வேண்டியது வரும். ஆனால் விற்பனை பிரதிநிதிகள் இவ்வாறான காரணம் கற்பிப்பதில்லை. விற்ப தற்கு ஒரு பொருள் அவர்களிடம் உள்ளது என அவர்கள் நம்புகின் றனர், அவ்வாறே செயல்படுகின்றனர். பல தடவைகள் மீண்டும், மீண்டுமாக அவர்கள் தோல்வியைத் தழுவினாலும் கூட அவர்கள் துவண்டு போவதில்லை. கடின உழைப்புக்கு நிச்சயம் பலன் உண்டு என அவர்கள் நம்புகின்றனர். அவ்வாறே தங்கள் பொருளை விற்கவும் செய்கிறார்கள். கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்றும், அவர் நம்மை இரட்சிக்க முடியும் என்றும் நாம் விசுவாசித்தால், நமக்கு அச்செய்தி உற்சாகத்தையும், புத்துணர்ச்சியையும் அளிக்கும்; நாம் கிறிஸ்துவுக்குள் பல ஆத்துமாக்களை ஆதாயப்படுத்த முடியும்; நமது நண்பர்களை உற்சாகப்படுத்தி, ஆராதனையில் கலந்து கொள்ளவும், வேதாகமத்தைக் கற்றுக் கொள்ளவும் செய்யமுடியும்; அல்லது நாம் சாதிக்க முயற்சிக்கும் வேறு காரியங்களையும் அடைய முடியும். அப்போஸ்தலருடைய நடப டிகள் 8ம் அதிகாரத்தைப் படியுங்கள்.

கிறிஸ்துவின் சபையிலிருந்து ஒரு அஞ்சல்வழி வேதாகமக்கல்வி இலவசமாக நடைபெற்றுக் கொண்டிருப்பதை சிலர் வெளியில் சொல்லுவது கூட கிடையாது. மக்கள் தவறான அபிப்பிராயம் கொண்டுள்ள படியால், கிறிஸ்துவின் சபையிலிருந்து வருகிறதென்றால் அப்படிப்பட்ட அஞ்சல் வழிக்கல்வியின் பாடங்களைத் தொடக்கூட மாட்டார்கள் என இவர்கள் கருதுகின்றனர். என்றபோதிலும், அநேகமாக அவர்கள் குறிப்பிடும் பகுதியில் சபையை அறிந்தவர்கள் மிகச் சிலரே இருக்கக்கூடும். சபையைப் பற்றி மிகக் கொஞ்சமே அறிந் தவர்கள் அல்லது முற்றிலுமாக அறியாதவர்கள் வசிக்கும் பகுதியிலே சபையைப் பற்றி மக்கள் எவ்வாறு தவறான அபிப்பிராயம் கொள்ள முடியும்? சபையை அவர்களிடம் அறிமுகம் செய்த (தவறான) முறையின் காரணமாக, ஒருவேளை நாம்தான் பிரச்சனையாக இருக் கக்கூடும். முக்கியமான விஷயம் என்னவென்றால், சத்தியம் அவர்க ளுக்கு அறிவிக்கப்பட வேண்டுமென்றிருந்தால், இப்போதோ அல்லது விரைவிலோ சபையைப் பற்றி அவர்கள் அறிந்தாக வேண்டும். ஏனென்றால், கிறிஸ்துவைப் பற்றி சத்தியத்தில், அவருடைய சபையைப் பற்றிய சத்தியமும் அடங்கியுள்ளது; அந்த சபை கர்த்தருடைய நாமத்தைத் தாங்கியுள்ளது; எனவே, ஒருவர் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிந்து இரட்சிக்கப்பட்டால், கிறிஸ்துவின் சபையில் ஒரு அங்கத்தினராக்கி தமது சபையில் கிறிஸ்து அவரை சேர்த்துக் கொள்ளுகிறார்.

அப்போஸ்தலருடைய நடபடிகள் 2ம் அதிகாரத்தைப் படிக்கவும். இப்போது, இவை அனைத்தையும் ஒருவன் அறிந்து கொள்ளாமல், எப்படி அவனுக்கு அஞ்சல்வழி வேதாகமக் கல்வியை கற்பிக்க இயலும் அல்லது சத்தியத்தை அவனுக்குக் கற்றுக் கொடுக்க முடியும்? சபையைப் பற்றிய தவறான அபிப்பிராயம் கொண்டுள்ள ஒருவனிடம், சபையைப் பற்றி தெளிவுபடுத்தாமல், நீ போதிக்க ஆரம்பித்து, பின்னர் உன்னை கிறிஸ்துவின் சபையின் பிரதிநிதி என அவன் அறியும் போது, உன்னைப்பற்றி தவறாக நினைப்பான். கர்த்தரையும் அவருடைய நாமத்தையும் கூற ஏன் வெட்கப்படுகிறாய்? மேலும், கர்த்தரைப் பற்றியும் அவருடைய சபையைப் பற்றியும் ஒருவன் மிகவும் தவறான கருத்துடன் இருந்தால், ஒருவேளை மனந்திரும்ப லாயக்கற்ற கொழுத்த இருதயம் படைத்தவனாகவும் அவன் இருக்கக்கூடும்.

இவை அனைத்திலும் காணும் உண்மை என்னவென்றால், 'அநேகர் இப்படிச் செய்கின்றனர்' அல்லது 'பலர் இப்படிச் செய்வ தில்லை' என்ற அடிப்படையில் தங்களுடைய செயல்களை நியாயப்ப டுத்த முயலுவோர் உள்ளனர். அல்லது, சத்தியத்தை சிலர் அப்படியே ஏற்றுக் கொள்ளமாட்டார்கள் என அவர்கள் பயப்படுகின்றனர். என்றாலும், நாம் நினைவில் கொள்ள வேண்டியது என்னவென்றால், பரலோகத்திற்கு கர்த்தரே வழி, ஒரே வழி, அவருடைய வழி இடுக்கண் நிறைந்தது. (யோ. 14 : 6, மத்தேயு 7 : 13, 14). நாம் எதைச் செய்ய வேண்டுமென்று அவர் விரும்புகிறாரோ, அதை மற்ற எவரும் செய்தாலும் செய்யாவிட்டாலும், அதை நாம் செய்ய வேண்டும். அல்லது, கர்த்தர் தடை செய்தவற்றை, உலகம் முழுவதுமே செய்து கொண்டிருந்தாலும், நாம் செய்யலாகாது. அவ்வாறு செய்தால் அவரால் நாம் ஏற்றுக் கொள்ளப்படமாட்டோம். மேலுமாக, கர்த்தரை நாம் உண்மையாகவே விசுவாசித்து, அவருக்கு நமது வாழ்க்கையில் முதலிடம் தர தயாராக இருக்கும்போது, பல ஆத்துமாக்களுக்கு கற்பித்து அவர்களை மனந்திருப்பி கிறிஸ்துவிடம் சேர்ப்பிக்கும் பல சந்தர்ப்பங் களைக் கடைபிடிப்போம். சாக்கு போக்கு சொல்ல மனம் இடம் தராது; நாம் கர்த்தரை நேசிப்போம், அவரைத் தாராளமாக ஏற்றுக் கொள்வோம், உலகத்திற்கு அவரை அறிவிப்போம், அவருக்கு உண்மையாகவே ஊழியஞ் செய்வோம், அவருடைய மதிப்பிற்கும் புகழுக்கும் பங்கம் விளைவிக்கமாட்டோம். இவை அனைத்திலும் நாம் எதை விசுவாசிக்கிறோம். நமது விசுவாசத்தின் பலம், நாம் பரலோகத் திற்குச் செல்ல எவ்வளவு வாஞ்சையுடையவர்களாக இருக்கிறோம் என்பதைப் பொறுத்திருக்கிறது.

**J.C. Choate** **J.C. சோட்**

# புதிய ஏற்பாட்டு ஆராதனை - 1

னுமாகிய பவுல்" (ரோமர் 1 : 1) என அவர் கூறினார். பேதுருவும், யாக்கோபும் இவ்வாறு கூறினர். (2 பேதுரு 1 : 1; யாக்கோபு 1 : 1)

## ஆராதனையின் அர்த்தம்

ஆராதிப்பது அல்லது தொழுதல் என்றால், வேதாகமத்தின்படி, ஊழியஞ்செய்தல், துதித்தல், கனம் செய்தல், மகிமைப்படுத்துதல், பக்தி செலுத்துதல் எனப் பொருள். அது அர்த்தமுள்ள ஆராதனையாக இருக்க வேண்டுமென்றால், ஆராதனையை ஏற்றுக் கொள்ளுகிறவரின் நியமனத்தின்படியே ஒரு புத்தியுள்ள ஜீவன் அதைச் செய்ய வேண்டும்.

### 1. ஊழியத்தின் மூலம் நாம் ஆராதிக்கிறோம்

ஊழியம் என்றால் இங்கு உதவி செய்தல், கீழ்படிதல், பணிசெய்தல், தொழுதல் எனப்படும். தேவனின் ஒரு பிள்ளையை ஊழியக்காரனாகவும், கர்த்தரை அவனுடைய எஜமானாகவும் வேதாகமம் சித்தரிக்கிறது. பவுல் தன்னைத்தானே ஒரு ஊழியக்காரனாக மீண்டும் மீண்டுமாக சித்தரித்தார். "இயேசு கிறிஸ்துவின் ஊழியக்காரனும், அப்போஸ்தலனாகும்படி அழைக்கப்பட்டவனும், தேவனுடைய சுவிசேஷத்திற்காகப் பிரித்தெடுக்கப்பட்டவ

இவர்கள் எல்லோரும் இப்படிக் கூற காரணம் என்ன? தங்களுடைய சகலவற்றையும் கர்த்தருக்கு அர்ப்பணித்து, அவருக்கு இப்போது ஊழியஞ் செய்வதை இவ்வாறு குறிப்பிட்டனர். நாமும் அவ்வாறே செய்ய வேண்டும். "இப்பொழுது நீங்கள் பாவத்தினின்று விடுதலையாக்கப்பட்டு, தேவனுக்கு அடிமைகளானதினால், பரிசுத்தமாகுதல் உங்களுக்குக் கிடைக்கும் பலன் முடிவோ நித்திய ஜீவன்" (ரோமர் 6 ; 22) என பவுல் கூறினார்.

எவ்வாறான ஊழியத்தை கர்த்தர் விரும்புகிறார் எனப் பார்க்க, கீழ்க் கண்ட சுவிசேஷ வசனங்களை நாம் கவனிக்க வேண்டும். "வெகு மனத்தாழ்மையோடும், மிகுந்த கண்ணீரோடும், யூதருடைய தீமையான யோசனைகளால் எனக்கு நேரிட்ட சோதனைகளோடும், நான் கர்த்தரை சேவித்தேன்." (அப். 20: 19) "உங்கள் நன்மை தூஷிக்கப்பட இடங்கொடாதிருங்கள். தேவனுடைய இராஜ்யம் புசிப்பும், குடிப்புமல்ல, அது நீதியும், சமாதானமும்,

பரிசுத்த ஆவியினாலுண்டாகும் சந்தோஷமுமாயிருக்கிறது. இவைகளிலே கிறிஸ்துவுக்கு ஊழியஞ் செய்கிறவன் தேவனுக்குப் பிரியனும் மனுஷரால் அங்கீகரிக்கப்பட்டவனுமாயிருக்கிறான். ஆனபடியால் சமாதானத்துக்கடுத்தவைகளையும், அந்நியோந்ய பக்திவிருத்தி உண்டாக்கத் தக்கவைகளையும் நாடக் கடவோம்." (ரோமர் 14 : 16 -19) " அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்; ஆவியிலே அனலாயிருங்கள்; கர்த்தருக்கு ஊழியஞ் செய்யுங்கள்". ( ரோமர் 12 : 11)

நாம் செய்ய வேண்டிய ஊழியத்தைப் பற்றி பவுல் எழுதுகிறார் "அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவ பலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத் தக்க புத்தியுள்ள ஆராதனை". (ரோமர் 12 : 1) "மனுஷருக்கென்று ஊழியஞ்செய்யாமல், கர்த்தருக்கென்றே நல்மனத்தோடே ஊழியஞ் செய்யுங்கள். (எபே. 6:8) தியத்திர சபைக்குக் கர்த்தர் கூறும் போது, "உன் கிரியைகளையும், உன் அன்பையும், உன் ஊழியத்தையும், உன் விசுவாசத்தையும், உன் பொறுமையையும், நீ முன்பு செய்த கிரியைகளிலும் பின்பு செய்த கிரியைகள் அதிகமாயிருக்கிறதையும் அறிந்திருக்கிறேன்" (வெளி. 2 : 19)

ஆராதனை ஊழியத்தைப் பற்றி நாம் அடிக்கடி பேசுகிறோம். ஆம், கர்த்தருக்கு நாம் ஊழியஞ் செய்கிறோம் என்ற வகையில் இது சரியே. வேறு கருத்தில் கூறும்போது, நமது வாழ்க்கை முழுவதும் தேவனுக்கு ஊழியஞ் செய்வதில் கழிகிறது? இவ்விதமாக நமது வாழ்வை அவரை ஆராதிப்பதில் நாம் செலவழிக்கிறோம். நாம் கர்த்தருக்குக் கீழ்படியவும், ஊழியம் செய்யவும் தவறினால், எவ்வாறு அவரை ஞாயிற்றுக்கிழமைகளிலும் அல்லது நமது வாழ்நாட்களிலும் ஆராதிப்பதைப் பற்றி எப்போதாகிலும் எண்ண முடியும்?

### உ. கர்த்தரைத் துதித்து நாம் அவரை ஆராதிக்கிறோம்.

பவுலும், சீலாவும் சிறையில் அடைபட்டிருந்த வேளையில், "நடுராத்திரியிலே பவுலும், சீலாவும் ஜெபம் பண்ணி, தேவனைத் துதித்துப் பாடினார்கள். காவலில் வைக்கப்பட்டிருந்தவர்கள் அதைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள்," (அப் 16 : 25) என சுவிசேஷம் அறிவிக்கிறது கர்த்தர் நம்மை எவ்வாறு ஆசீர்வதித்துள்ளார் என்பது பற்றியும், நாம் அவருக்கு செய்ய வேண்டிய கடமைகள் பற்றியும் பவுல்

பேசும்போது,"மேலும் கிறிஸ்துவின் மேல் முன்னே நம்பிக்கையாயிருந்த நாங்கள் அவருடைய மகிமைக்குப் புகழ்ச்சியாயிருக்கும்படிக்கு" தெரிந்து கொள்ளப்பட்டோம் என்று எழுதுகிறார். (எபே. 1 : 11) மீண்டுமாக நாம் படிக்கிறோம். ஆகையால், அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திரப் பலியை அவர் மூலமாக எப்போதும் தேவனுக்குச் செலுத்தக்கடவோம்." (எபி. 13 : 15) பேதுரு கூறுகிறார்; " அழிந்துபோகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும், அதைப்பார்க்கிலும் அதிக விலையேறப் பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, இயேசு கிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்குப் புகழ்ச்சியும் கனமும் மகிமையுண்டாகக் காணப்படும்". (1 பேதுரு 1 :7) "ஒருவன் போதித்தால் தேவனுடைய வாக்கியங்களின்படி போதிக்கக்கடவன்; ஒருவன் உதவி செய்தால் தேவன் தந்தருளும் பெலத்தின்படி செய்யக் கடவன்; எல்லாவற்றிலேயும் இயேசு கிறிஸ்து மூலமாய்த் தேவன் மகிமைப்படும்படியே செய்வீர்களாக; அவருக்கே மகிமையும் வல்லமையும் சதா காலங்களிலும் உண்டாயிருப்பதாக" (1 பேதுரு 4 : 11).

நமது சகல செயல்களிலும் வார்த்தைகளிலும் தினமும் கர்த்தரைத் துதிக்க வேண்டும். முக்கியமாக, நாம் கர்த்தருடைய நாளிலே ஆராதிக்க கூடிவரும்போது, குறிப்பாக அவரைத் துதிக்க வேண்டியே நாம் கூடிவருகிறோம். கூடுவதின் மூமாகவும், இறுதியாக நாம் கூடியிருக்கையில் செய்யும் காரியங்களின் வழியாகவும் அவரை நாம் ஆராதிக்கிறோம். நமது இருதயங்களைத் தாழ்த்தி, நமது வேதவாசிப்பு, ஜெபம், பாடல், கொடுத்தல், கர்த்தரின் பந்தியில் கலந்து கொள்ளுதல் மூலமாக நாம் அவரை ஆராதிக்க வேண்டும். இவற்றை நாம் செய்ய மறுத்தால், நாம் எப்படி அவரை ஆராதிக்க இயலும்?

**3. கர்த்தரை கனம் செய்வது நாம் அவரை ஆராக்கிறோம்**

"குமாரனைக் கனம் பண்ணாதவன் அவரை அனுப்பின பிதாவையும் கனம் பண்ணாதவனாயிருக்கிறான்" (யோவான் 5 : 23) என இயேசு கூறினார். "நித்தியமும் அழிவில்லாமையும், அதரிசனமுள்ள ராஜனுமாய், தாம் ஒருவரே ஞானமுள்ள தேவனுமாயிருக்கிறவருக்கு, கனமும் மகிமையும் சதா காலங்களிலும் உண்டாயிருப்பதாக ஆமென்" (1 தீமோ. 1 : 17 என்று பவுல் எழுதினார்.

நம்மை இரட்சித்திருப்பவரும், ஆசீர்வதிப்பரும், ஒரு நல்வாழ்க்கையின் நம்பிக்கையை நமக்கு அளிப்பவருமாகிய கர்த்ரை, நாம் கனம் செய்யக் கடமைப்பட்டுள்ளோம்.

**4. கர்த்தரை மகிமைப்படுத்தி நாம் அவரை ஆராதிக்கிறோம்.**

மகிமைப்படுத்துவது என்றால் புகழ்தல், கனப்படுத்துதல், துதித்தல் எனப் பொருள். ஆராதனையின் அர்த்தத்திற்கு இவை ஒத்துப் போகின்றன. இக்கருத்தை வலுப்படுத்தும் சில வசனப்பகுதிகளை நாம் மீண்டுமாகக் கவனிப்போம்: "நீங்கள் ஒருமனப்பட்டு நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனை ஒரே வாயினால் மகிமைப்படுத்தும்படிக்கு, பொறுமையையும், ஆறுதலையும் அளிக்கும் தேவன், கிறிஸ்து இயேசுவினுடைய மாதிரியின்படியே, நீங்கள் ஏக சிந்தையுள்ளவர்களாயிருக்கும்படி உங்களுக்கு அநுக்கிரம் செய்வாராக". (ரோமர் 15;5,6).

"கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே; ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள்" (1 கொரி 6 : 20) "ஒருவன் கிறிஸ்தவனாக இருப்பதினால் பாடுபட்டால் வெட்கப்படாமலிருந்து, அதனிமித்தம் தேவனை மகிமைப்படுத்தக்கடவன்" (1 பேதுரு4 : 16) சகலவற்றிற்கும் நாமே காரணம் என பெருமை பாராட்டுவதை விடுத்து சகல காரியங்களிலும் தேவனை முன்னிலைப்படுத்தி, அவரைப் புகழ்ந்து, கனப்படுத்தி, அவர் நாமத்தை மகிமைப்படுத்துவதே நமது வாழ்வின் லட்சியமாக இருக்க வேண்டும். அவரோடு நம்மை ஒப்பிடும்போது நாம் ஒன்றுமில்லை. கர்த்தரின் நாளில் நாம் கூடி வருவதின் நோக்கம், நமது சிந்தனை முழுவதையும் அவரை நோக்கி செலுத்தவும், இவ்வாறாக அவரை ஆராதிக்கவும்தான்.

**J.C. CHOATE**

**J.C. சோட்**

**தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுது கொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுது கொள்ள வேண்டும் என்றார்.**

**யோவா 4 :24**

## யெகோவா சாட்சிகள் - (8)

# பரிசுத்த ஆவியின் நபர்த்தத்துவத்தை மறுதலிக்கும் கூட்டத்தார்

பரிசுத்த ஆவியானவர் தமது வித்தியாசப்பட்ட தன்மைகளினாலும், செயல்களினாலும் அவர் ஒரு நபர் என்பதைக் கடந்த இதழில் கண்டோம். அதே தலைப்பில் இப்போது தொடர்கிறோம்.

மத்தேயு 28 : 19ல், 'நீங்கள் புறப்பட்டுப் போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா, குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து' என்று கூறப்பட்டுள்ளது. இவ்வசனத்தை வியாக்கியானம் பண்ணி இம்மக்கள் குறிப்பிடும்போது, 'ஒரு பெயர் (நாமம்)' நபரை மட்டும் குறிக்காமல், நபருக்கு அப்பால் ஏதாவது ஒன்றை குறிப்பிடலாம். உதாரணமாக, 'சட்டத்தின் பெயராலே' அல்லது 'பொது அறிவு என்ற பெயரில்' என்று நாம் கூறும்போது, ஒரு நபரைக் குறித்து நாம் பேசுவதில்லை. மாறாக, மேற்குறித்தவைகளில், 'சட்டத்தின் அதிகாரத்தை' வலியுறுத்துகிறது. அதுபோலவே, பரிசுத்த ஆவியின் நாமத்திலே என்பதும் நபரைக் குறிக்கிறது' என்கின்றனர்.

அவர்களுக்கு நாம் சொல்லிக் கொள்ள விரும்புகிறோம் 'பிதாவின் நாமம்' பிதாவையும், குமாரனின் நாமம் குமாரனாகிய கிறிஸ்துவையும் குறிக்குமானால், (அதாவது இந்த இரண்டு நாமங்களும் நபர்களைக் குறிக்குமானால்) பரிசுத்த ஆவியின் நாமமும் கட்டாயம் ஒரு நபரைக் குறித்தாக வேண்டும். தங்கள் இஷ்டப்படி வசனங்களைப் புரட்டியே போதித்துப் பழக்கப்பட்ட யெகோவா சாட்சியினர், சத்தியத்தை உள்ளபடிக் காண இயலுவதில்லை.

### பிற நிரூபனங்கள்

'தண்ணீர், அக்கினி போன்ற (மத். 3 : 11, மாற். 1 : 8) அஃறிணைப் பொருட்களின் பெயர்களைப் பயன்படுத்துவது போலவே, பரிசுத்த ஆவிக்கும் வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டுள்ளது என்று கூறி, பரிசுத்த ஆவியின் நபர்த் தத்துவத்தை காவல் கோபுர (யெகோவா சாட்சி) நபர்கள் மறுதலிக்கின்றனர். நாம் அவர்களைக் கேட்க விரும்புகிறோம், 'வழி' (யோவான் 10 : 9) என்றும், 'சத்தியம்' (யோவான் 14 : 6), 'அப்பம்'

என்றும் (யோவான் 6 : 48) அழைக்கப்படுகிற கிறிஸ்துவை ஏன் இவர்கள் நபராக கூறுவதாக ஏற்றுக்கொள்கின்றனர்.

தேவத்துவத்தில் ஒருவராக பரிசுத்த ஆவியானவரும் பேசப்படுவதே அவரும் ஒரு நபர் என்பதை நிரூபிக்கிறது. யெகோவாவின் (தேவ) ஆவி என்ற பதம் 22 முறைகளும், தேவனுடைய ஆவி என்று 31 முறையும் கர்த்தரின் ஆவி என்று 30 முறையும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்துவை (மரியாளின் வயிற்றில்) கர்ப் பந்தரிக்க வைத்தார். (லூக். 1 : 35) நேர்மையான எந்த மனுஷனும், கரு உண்டாக்க ஒரு நபரல்லாத அஃறினை சக்தியால் இயலாது என்பதை ஒப்புக் கொண்டாக வேண்டும். உயிருள்ள ஒரு ஜீவராசி அல்லது நபரால் மட்டுமே மற்றொரு ஜீவனை உண்டாக்க இயலும்.

ஆதலால் 'பிரியமானவர்களே, உலகத்தில் அநேகக் கள்ளத்தீர்க்கதரிசிகள் தோன்றியிருப்பதினால், நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்தறியுங்கள். தேவ ஆவியை எதினாலே அறியலாமென்றால், மாம்சத்திலே வந்த இயேசு கிறிஸ்துவை அறிக்கை பண்ணுகிற எந்த ஆவியும் தேவனால் உண்டாயிருக்கிறது. மாம்சத்தில் வந்த இயேசு கிறிஸ்துவை அறிக்கை பண்ணாத எந்த ஆவியும் தேவனால் உண்டானதல்ல; வருமென்று நீங்கள் கேள்விப்பட்ட அந்திக் கிறிஸ்துவினுடைய ஆவி அதுவே. அது இப்பொழுதும் உலகத்தில் இருக்கிறது.' (1 யோவான் 4 : 1 - 3).

## எச்சரிக்கையாயிருங்கள்!

அடுத்த இதழில் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக் குறித்து ஆராய்வோம்.

**E.A. Arumugam**
**Dindigul.**

(தொடரும்)

# அவர்கள் உங்கள் கதவைத் தட்டும் போது...

பலதரப்பட்ட வித்தியாசமான மதப்பிரிவுகளைச் சார்ந்த குழுக்களின் பிரதிநிதிகள், சிறு சிறு கூட்டங்களாகப் பிரிந்து, பல வேளைகளில் கிறிஸ்தவர்களின் வீட்டுக் கதவுகளைத் தட்டி, தங்களின் குறிப்பிட்ட பிரிவு சபை பற்றிப்பேச அனுமதி கேட்கும் அனுபவத்தைப் பெற்ற கிறிஸ்தவர்கள் இருக்கக்கூடும்.

அவ்வாறு உங்கள் வீட்டுக் கதவைத் தட்டும்போது, நீங்கள் என்ன செய்வீர்கள்? அவர்களை உள்ளே அனுமதிக்க மறுப்பீர்களா? அல்லது அவர்களை வீட்டுக்குள் அனுமதித்து, உபசரித்து உபதேசத்தைக் கேட்பீர்களா? இல்லையென்றால், வீட்டு வாசலிலே நின்றே அவர்களிடம் விவாதம் செய்வீர்களா? அவர்களிடம் பேசுவது வீண் பொழுது போக்கா? எந்த சக்தியுமே அவர்களை மாற்ற இயலாத 'கொள்கை உறுதி' படைத்தவர்கள் என்று எண்ணுகிறீர்களா?

கிறிஸ்தவர்களாகிய நீங்கள் பிறர் வீட்டுக் கதவைத் தட்டும் போது, ஏற்பட்ட அனுபவங்கள் யாவை?

இவ்வாறாக 'கதவைத் தட்டும்' பிரிவினை கூட்டத்தார் உங்கள் இல்லத்திற்கு வந்தால், நீங்கள் ஒரு வழியைக் கடைபிடிக்கலாம்; "நாம் நம்புவதை நீங்கள் ஒரு பத்து நிமிடங்களுக்குக் கேட்க தயாராக இருந்தால், அடுத்து உங்கள் பேச்சையும் நான் அதே பத்து நிமிடங்களுக்கு கேட்க தயாராக இருக்கிறேன்" என்று ஒரு நிபந்தனையை அவர்களிடம் அறிவியுங்கள். முற்றிலும் எதிர்பாராத உங்களின் இந்த நிபந்தனை அவர்களை கொஞ்சம் நிலைகுலைய வைக்கும். ஏனெனில் அவர்களின் சரக்கை உங்களிடம் இறக்குமதி செய்யத்தான் அவர்கள் வந்தார்களேயன்றி, உங்கள் பேச்சைக் கேட்க அல்ல!

ஒருவேளை, உங்கள் நிபந்தனையை அவர்கள் ஏற்றுக் கொண்டால், பத்து நிமிடங்களில் அவர்களிடம் கீழ்க்கண்டவற்றைப் போதிக்கலாம்.

1. வேதாகமம் கர்த்தருடைய வார்த்தை என்பதை நான் விசுவாசிக்கிறேன். ஏனெனில், "பரிசுத்த வேத எழுத்துக்கள் கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினாலே உன்னை இரட்சிப்புக்கேற்ற ஞானமுள்ளவனாக்கத்தக்கது; வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனிதன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள்

உபதேசத்திற்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது' நான் வேதாகமத்தை கர்த்தருடைய வசனம் என விசுவாசிப்பதால். . .

2. "நியாயப் பிரமாணத்தை மீறுகிறது பாவம்" (1 யோ. 3:4) என்றும், "எல்லாரும் பாவஞ்செய்து, தேவ மகிமையற்றவர்களாயினர்" (ரோமர் 3:23) என்றும் நம்புகிறேன். அதன் வினைவாக, "நீங்கள் உங்கள் அவயவங்களை அசுத்தத்திற்கும் அக்கிரமத்திற்கும் அடிமைகளாக ஒப்புக் கொடுத்து" விட்டபடியால், இறுதியில்"பாவத்தின் சம்பளம் மரணம்" என்பதையும் நம்புகிறேன். (ரோ 6:23)

3. பரிசுத்தமான தேவனின் சந்நிதானத்தில் நமது சொந்த முயற்சிகள் எவற்றாலும் நம்மால் நிற்க முடியாதபடி நாம் பாவிகளாக இருப்பதை நான் விசுவாசிக்கிறேன்."நமது அக்கிரமங்களே நமது தேவனுக்கும் நமக்கும் நடுவாகப் பிரிவினை உண்டாக்குகிறது; நமது பாவங்களே அவர் நமக்கு செவி கொடாதபடிக்கு அவருடைய முகத்தை நமக்கு மறைக்கிறது" (ஏசாயா 59:2) எங்களுடைய அதிகமான நற்செயல்களால் "எங்களுடைய நீதிகளெல்லாம் அழுக்கான கந்தை போல் இருக்கிறது", (ஏசாயா 64:6)

4. "அன்றியும் நான் பெலனற்றவர்களாயிருக்கும் போதே குறித்த காலத்தில் கிறிஸ்து அக்கிரமக்காரருக்காக மரித்தார்" என்பதை நான் விசுவாசிக்கிறேன். (ரோமர் 5:6) இச்செயலால் "நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப் பண்ணுகிறார்" (ரோ 5:8)

5. தேவன் உலகத்தாருடைய பாவங்களை எண்ணாமல், கிறிஸ்துவுக்குள் அவர்களை தமக்கு ஒப்புரவாக்கினார்" என்பதையும், "நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்." (2 கொரி 5:19, 21).

6. தேவனின் இரட்சிப்பின் திட்டங்களுக்கு கீழ்ப்படிவதென்றால் நாம்,"பாவத்தினின்று விடுதலையாக்கப்பட்டு, தேவனுக்கு அடிமைகளானதினால், பரிசுத்தமாகுதல் நமக்குக் கிடைக்கும் பலன், முடிவோ நித்திய ஜீவன்" (ரோமர் 6:22)

7. "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" என்ற இயேசு கிறிஸ்துவின் உரிமையை நான் விசுவாசிக்கிறேன். (யோ. 14:6) அவருடைய உயிர்த்தெழுதலுக்குப் பின்னர், இயேசு தனக்கு "சகல அதிகாரமும்" கொடுக்கப்பட்டிருப்பதையும், மக்களின் பாவமன்னிப்புக்கும் இரட்சிப்புக்கும் அவர் கட்டளையிட்ட

யாவையும் அவர்கள் கைக்கொள்ளுமாறு, அப்போஸ்தலர்கள் உபதேசம் பண்ணவும் உத்திரவிட்டார் (மத்தேயு 28:18-20)

8. சிறிது நாட்களுக்குப்பின் (பெந்தெகொஸ்தே நாளில்) தங்களுக்கு இடப்பட்ட கட்டளையின்படியே கிறிஸ்துவின் அப்போஸ்தலர்கள் செய்தனர் என்பதை நான் நம்புகிறேன். "கர்த்தருடைய நாமத்தை தொழுது கொள்ளுகிறவன் எவனோ அவன் இரட்சிக்கப்படுவான்" (அப் 2:21) என அவர்கள் மக்களுக்குப் போதித்தனர். அப்போதனைகளைக் கேட்ட மக்கள், கிறிஸ்துவையும் அவருடைய நற்செய்தியையும் விசுவாசித்தால், "நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள்" (அப். 2:38) என அப்போஸ்தலர்கள் அவர்களுக்கு கட்டளையிட்டனர் கர்த்தரின் விருப்பப்படியே இது நடந்தது. பின்னர், நாம் புதிய ஏற்பாட்டில் காண்பதைப்போல, பிறகு பகுதி மக்களுக்கும் அதே போன்ற இரட்சிப்பின் திட்டம் வற்புறுத்தப்பட்டது.

9. "இரட்சிக்கப்படுகிறவர்களை கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டு வந்தார்" (அப். 2:47) என்பதை நான் நம்புகிறேன். தொடர்ந்து இவ்வாறாக சபையில் சேர்த்துக் கொண்டு வருகிறார்; ஏனெனில் இதே பாவமன்னிப்பும் இரட்சிப்பின் திட்டமும் உலக முடிவு பரியந்தம் தொடருகிறது. (மத்தேயு 28:20 : யூதா. 3)

10. புதிதாக எருசலேமில் நிறுவப்பட்ட சபையின் அங்கத்தினர்கள், "அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோனியத்திலும் அப்பம் பிட்குதலிலும், ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்" (அப். 2: 42) என்பதை நான் விசுவாசிக்கிறேன். நாம் புதிய ஏற்பாட்டைப் படிக்கும்போது, எல்லா பிராந்திய சபைகளும் ஒரே காரியத்தைப் போதிக்கவும் நடத்தவும் எதிர்பார்க்கப்பட்டனர் என்பதைக் காண முடிகிறது. "நான் எங்கும் எந்தச் சபையிலும் போதித்து வருகிற பிரகாரம் கிறிஸ்துவுக்குள்ளான என் நடக்கைகளை ஞாபகப்படுத்த" கொரிந்து சபை அங்கத்தினர்களிடம் தீமோத்தேயுவை தான் அனுப்பும்போது அப்போஸ்தலர் பவுல் கூறுகிறார்.

இறுதியாக, தனது அப்போஸ்தலர்கள் மூலமாக கிறிஸ்து எதைக் கட்டளையிட்டாரோ அவற்றை மக்கள் அவ்வாறே கடைபிடிக்கும்போது, அவர்கள் இரட்சிக்கப்பட்டு, கிறிஸ்துவால் அவருடைய சபையில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள் என்பதை நான் விசுவாசிக்கிறேன். அவ்வாறு சேர்க்கப்பட்டவர்கள் கிறிஸ்துவின் சபையில் கிறிஸ்தவர்களாக மட்டுமே இருக்கிறார்கள்.

தமிழில் : எஸ். எஸ். ராஜன்.

# HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRI LANKA

**HINDI** : Sunday 8:45 P.M. - 9.00 P.M. Tuesdays, Thursdays, and Fridays, 9.00 P.M. - 9.15 P.M. Speaker, Sunny David, Box 3815, New Delhi - 110049.

**ENGLISH** : Mondays, 9.00 P.M. - 9.15 P.M. Fridays, 7.45 P.M. - 8.00 P.M. Speaker, J.C. Choate, Box 3815, New Delhi - 110049.

**TELUGU** : Sundays, Tuesdays, Thursdays, Fridays, and Saturdays, 2.15 P.M. 2.30 P.M. Speaker, Joshua Gootam, Box 80, Kakinada - 533 001.

**TAMIL** : Sundays, Thursdays, 6.45 P.M. - 7.00 P.M. Tuesdays, 5.30 P.M. 5.45 P.M. Speaker, P.R. Swamy, Box 8405, Banagalore - 560 084.

**MALAYALAM**: Tuesdays and Fridays, 3.45 P.M. - 4.00 P.M. Speaker, P.K. Varghese, Sunny Meads Lane, Behind Sanskrit College, Trivandrum - 695 034.

**KANNADA** : Sundays, 1.45 P.M. 2.00 P.M. - 2.00 P.M. Speaker, Robert Rathnakar, Box 448, Banagalore - 6600 004.

Please write to these addresses for Bible correspondence course, magazines, and other Christian literature in your language.

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST.

Licenced to Post without Prepayment of Postage TN/ERD/W/0 PP/5
Posted ar Erode HPO on 20, SEP. 1995
SEP. 1995, THIRUMARAI AASAAN Regd. No. TN/ERD/49

## -:அஞ்சல் வழி வேதாகமக் கல்வி :-

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்றுக் கொள்ள விரும்புவோருக்கு ஓர் இனிய செய்தி. ஆம், மிகத் தேர்ந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்ட, "அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியை ஆரம்பிக்க கர்த்தர் கிருபை புரிந்துள்ளார்.

இது, 15 பாடங்களைக் கொண்ட இலவசப் பயிற்சி. இப்பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு, "சான்றிதழ்" வழங்கப்படும்.

பயிற்சியில் சேர விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

இயக்குநர்
அஞ்சல் வழி வேதாகமக் கல்வி
த.பெ.எண். 27
காங்கயம் - 638 701.

Published by Church of Christ, Kangayam and
Printed at Jeeva Sakthi Press, Erode. Editor E.Z.S. Rajanayagam

If undelivored Please return to
The Editor
THIRUMARAI AASAAN
POST BOX No. 27, KANGAYAM - 638 701

PRINTED MATTER

BOOK - POST